# திருமலைத்தீபம்

Thirumalaitheepam

தீபம் - 79 ஆவணி Email : theepamlink@gmail.com TP: 026 222 1022/ 026 205 4362 Rs.40/=



## ஆயரின் ஆசிச் செய்தி

**கிறிஸ்துவில் அன்புள்ள சகோதர சகோதரிகளே!**

**ஆண்டவர் பெயரால் நல்வாழ்த்துக்கள்.**

சில இடைவெளியின் பின் திருமலை தீபம் வெளிவருகின்றது. இன்றைய பொருளாதார சூழ்நிலை காரணமாக எமது பத்திரிகை வெளியீடு பற்றி சில மாற்றங்கள் செய்ய வேண்டியுள்ளது.

மரியன்னையின் விண்ணேற்பு திரு அவைக்கு மாபெரும் பெருவிழாவாகும். ஏனைய யூதப் பெண்களைபோல மரியன்னையும் திருநூலை வாசிப்பதிலும் மெசியாவின் வருகைக்காக ஆவலோடு காத்திருப்பதிலும் குறியாக இருந்தவர். ஆனால் அவரே மெசியாவின் தயாகும் வரத்தைப் பெறுவார் என எதிர்பார்த்திருக்கமாட்டார். மரியாவின் பெற்றோரின் வளர்ப்பு, அவரது பக்தி, பணிவு, புனித வாழ்வு எல்லாம் அவரை இயேசுவின் தாயாகும் நிலைக்கு உயர்த்தியது. அமல உற்பவியாக மரியா பிறந்து இறைவனுக்கு புகழும், பெருமையும் சேர்க்கும் வண்ணம் வாழ்ந்தார். “**நான் ஆண்டவரின் அடிமை உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்**” எனும் அர்ப்பணம் நிறைந்த வார்த்தைகளும் அதை நிஜமாக்கியதும் மரியாவின் சிறப்பம்சமாகும். இறைவனும் மரியாவை விண்ணேற்படையச் செய்தார். “**மாசற்ற கன்னி ஆதிப்பாவக்கறை எதுவுமின்றிப் பாதுகாக்கப்பெற்று தம் மண்ணக வாழ்வு நிறைவுற்றதும் ஆன்மாவோடும் உடலோடும் விண்ணுலக மாட்சிக்கு எடுத்துச் செல்லப் பெற்றார்**” என 1950ம் ஆண்டு நம்பிக்கை சத்தியமாக திருத்தந்தை 12ம் பயஸ் பிரகடனப்படுத்தினார்.

இன்றும் மரியன்னை எமக்காகப் பரிந்துபேசும் அன்பும் இரக்கமும் நிறைந்த நல்லனையாகத் திகழ்கிறார். நீதி, நீதித்தீர்ப்போடு இயேசு வர மரியாவோ அன்பையும் இரக்கத்தையும் மட்டும் தனது பலமாகக் கொண்டு எமக்காகப் பரிந்து பேசுகின்றார்.

பொருளாதாரம், அரசியல், ஆட்சிமாற்றம் என குழம்பியிருக்கும் இலங்கைத்தீவில் சுமூகமான சூழ்நிலை விரைவாக உருவாகி மக்கள் இயல்பு வாழ்விற்குத் திரும்ப வேண்டுமென மன்றாடுவோம், செயல்படுவோம். இந்நாட்களில் மலையகப் பகுதிகளில் ஏற்பட்ட பெருமழையாலும் வெள்ளத்தாலும் அப்பகுதியில் வாழும் மக்கள் பெரும் சிரமத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். இவர்களுக்காகவும் நாம் செபிப்போம். சந்தர்ப்பங்கள் கிடைக்கும்போது எம்மால் முடிந்த தாராள உதவிகளைச் செய்வோம்.

இம்மாதம் 19ம் திகதி அருட்தந்தை சுகுனேந்திரன் குரூஸ், அருட்தந்தை யூட் ஜோன்சன் அடிகள் தமது குருத்துவப் பணிவாழ்வில் 25ம் வருடத்தை நிறைவு செய்கிறார்கள். இவர்களது அர்ப்பணம், பணி, பங்களிப்புகளுக்கு மறைமாவட்டம் நன்றி கூறுகின்றது. அதேவேளை இவர்களை நாம் பாராட்டி வாழ்த்துகின்றோம். அருட்தந்தை சுகுனேந்திரன் தற்போது உவர்மலை குழந்தை இயேசு ஆலய பங்குத் தந்தையாகவும், அருட்தந்தை யூட் ஜோன்சன் கண்டி தேசிய குருமடத்திலும் பணியாற்றுகின்றார்கள். இவர்கள் பணி தொடர இறையாசீர் வேண்டி நிற்கின்றோம்.

எமது பணிகள் தொடர செபிப்போம், மரியன்னையின் பரிந்து பேசுதலையும் நாடுவோம். இறைவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.

**பேரருட்திரு கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல்**

திருகோணமலை மறைமாவட்ட ஆயர்.

## வாழ்த்துவோம் செபிப்போம்

### குருத்து வாழ்வில் வெள்ளிவிழா காணும் அருட்பணியாளர்கள்

### 19.08.1997 – 19.08.2022




**அருட்பணி ஹெக்டர் யூட் ஜோன்சன்**

திருகோணமலை, மட்டக்களப்பு மறைமாவட்டங்களில் பணியாற்றியவர் தற்போது கண்டி அம்பிட்டிய தேசிய குருமடத்தில் குருத்துவ உருவாக்கல் பணியில் பணியாற்றுகிறார். திருகோணமலை மறைமாவட்ட பாலையூற்று புனித லூர்து அன்னை திருத்தலத்தின் பங்கு மகனுமாவார்.



**அருட்பணி செபமாலை சுகுனேந்திரன் குரூஸ்**

திருகோணமலை, மட்டக்களப்பு மறைமாவட்டங்களிலும், கண்டி தேசிய குருமடத்திலும் பணியாற்றி தற்போது உவர்மலை குழந்தை இயேசு ஆலய பங்குத்தந்தையாக பணிதொடர்கின்றார். இவர் திருகோணமலை மறைமாவட்ட மூதூர், புனித அந்தோனியார் ஆலய பங்கு மகனுமாவார்.

இறையழைப்பிற்கு ‘ஆமென்’ என்று பதிலளித்து 25 ஆண்டுகள் கடந்தும் அர்ப்பணிப்போடு பணிதொடரும் இவ்வருட்பணியாளர்களின் பணி இனிவரும் காலங்களிலும் இறை சித்தப்படி தொடர செபித்து வாழ்த்துவதில் பேருவகை கொள்கின்றது திருகோணமலை மறைமாவட்டம்.

## 279 சிறார்களுக்கு நிரந்தர சின்னம் சூட்டும் நிகழ்வு







பாலையூற்று புனித லூர்து அன்னை திருத்தலத்தில் 279 சிறார்களுக்கு சின்னம் சூட்டி நிரந்தர அங்கத்துவம் கொடுக்கப்பட்டது. இத்திருப்பலியில் சிறார்களை மோட்சத்திற்கு இட்டுச் செல்லும் சிறிய மறைத்தூதர்களாக நாம் மாறவேண்டும் என்கிற சிந்தனையை ஆயர் தன்னுடைய மறையுரையில் கூறினார். பேராசை நம்மை போட்டி, பொறாமை, சுயநலமுள்ளவர்களாக மாற்றும் ஆகவே பேராசையைத் தவிர்த்து சுயநலமற்றவர்களாக சமூக இறைபற்றுள்ளவர்களாக வாழவேண்டும்மென்கிற கருத்தை முன்மொழிந்தார். இச்சிறப்பான திருப்பலியை ஒழுங்கமைத்துக் தந்த பங்குத்தந்தை ஊக்குவிப்பாளர் அனைவருக்கும் நன்றி. துலைமைதாங்கிய ஆயரையும் மறைமாவட்ட இயக்குனரையும் நன்றியோடு நினைக்கின்றோம்.

# கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் மறைக்கல்வி மாணவர்கள் மற்றும் மறையாசிரியர்களுக்கான செயற்பாடுகள்

## மறைக்கல்வி மாணவர்களுக்கான விவிலிய எழுத்துப் பரீட்சை போட்டி










## மறைக்கல்வி மாணவர்களுக்கான விவிலிய பேச்சுப் போட்டி






## மறையாசிரியர்கள் மற்றும் மறைக்கல்வி மாணவர்களின் பெற்றோருக்கான கருத்தமர்வு












**இம்மாத மேற்கோள்கள் APJ அப்துல் கலாமின் சிந்தனைகளிலிருந்து!**



# அன்னையின் வழியில் நம்பிக்கையாளர்களாய்

இறை இயேசுவில் பிரியமான வாசகர்களே,

உங்கள் அனைவருக்கும் எங்கள் அன்னை புனித மரியாளின் பரிந்துரை செபத்தோடு வாழ்த்துவதில் பேருவகை அடைகின்றேன். மடு திருத்தலம் தொடங்கி பல மறை மாவட்டங்களில் ஆவணி 15 அன்னை மரியாளின் விண்ணேற்புப் பெருவிழாவை தங்கள் ஆசனக்கோவில் விழாக்களாக கொண்டாடும் அனைத்து இறைமக்கள், ஆயர்கள், குருக்களுக்கும், இருபால் துறவிகளுக்கும் அன்னை புனித மரியாளின் வாழ்வு ஓர் எடுத்துக்காட்டாகவும், நம்பிக்கை வாழ்விற்கான உந்துதலாகவும் இருக்க வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

அன்னையிடமிருந்து கற்றுக்கொள்ளும் பல புண்ணியங்களில் முதலாவதாக நாம் காணக்கூடியதும், இக்காலத்தில் நமக்கு தேவையானதாகவும் காணப்படுவது நம்பிக்கையாகும். எபிரேயருக்கு எழுதப்பட்ட கடிதத்தில் அதன் ஆசிரியர் இந்த நம்பிக்கை குறித்த வாதத்தினை மிக தெளிவாக முன்வைக்கின்றார்:

**"ஆபிரகாம் சோதிக்கப்பட்ட போது ஈசாக்கைப் பலியிட துணிந்தது நம்பிக்கையினால்தான். "ஈசாக்கின் மூலமே, உன் வழிமரபு விளங்கும்" என்ற வாக்குறுதியை அவர் பெற்றிருந்த போதிலும், அவர் தம் ஒரே மகனைப் பலியிட முன்வந்தார்" ஏனெனில், இறந்தோரைக் கடவுள் உயிரோடு எழுப்ப வல்லவர் என்பதை அவர் உணர்ந்திருந்தார். எனவே, அவர் தம் மகனை மீண்டும் பெற்றுக்கொண்டார்."** (எபி. 12,17-19)

இவ்வாறுதான் நம் ஒவ்வொருவரின் வாழ்வும் பல வேளைகளில் சோதிக்கப்படுகின்றது. ஆயினும் நாம் நம் எதிர்காலமே இதுதான் என்று ஏதாவது ஒன்றினை இறுக்கமாகப் பற்றிக் கொண்டிருப்பதால் அதனை இழக்க முன்வராமல், அதைப் பாதுகாக்க, ஆலயம் ஆலயமாக, கோவில் கோவிலாக அலைகிறோம், செபத்திற்கு மேல் செபம் ஒப்புக்கொடுக்கின்றோம், புனிதர் பின் புனிதராக பொருத்தனைகள் செய்து கொண்டு அலைகின்றோம். ஆபிரகாமும் அவர் பின் அன்னை மரியாவும் நமக்கு காட்டும் நம்பிக்கையின் வாழ்வு அற்புதமாக காட்சியளிக்கின்றது.

தம் எதிர்காலமே இதுதான் என்று தெரிந்திருந்தாலும். இதுவும் இறைவன் அளித்ததே எனவே அவர் அளித்ததை அவர் பாதுகாப்பார், அல்லது இன்னும் பெரிதாய், இன்னும் நம்பிக்கைக்கு உரியதாய் அதனை மாற்றித்தருவார் என்ற நம்பிக்கையோடு அவர்கள் ஒப்படைத்தார்கள் அதனால் எது அழிவைச் சந்திக்கப்போவதாய்த் தோன்றியதோ அதுவே வாழ்வை அளிப்பதாய் மாறியது.

ஈசாக்கு பெரிய சந்ததியைத் தோற்றுவித்த யாக்கோபிற்கு தந்தையானார். புனித மரியன்னையிடம் பிறந்த இயேசு அழியாத வாழ்வை உலகினர் அனைவருக்கும் அளிக்கும் கிறிஸ்துவாய் உயிர்பெற்றெழுந்தார். இதற்காக அவர்கள் செய்ய முன்வந்ததெல்லாம் இறைவனில் நம்பிக்கையோடு தம் எல்லாம் என்றிருந்தவர்களைப் பலியிட முன்வந்தார்கள்.

நம் கௌரவம், நம் குடும்ப பெருமை, நம் உயர் பதவி, நம் பெருமை, நம் பொருள், நம் நிலம் என்று ஏராளம் அடுக்கிக்கொண்டே போகலாம் இதில் எதையுமே இழக்கவோ விட்டுக்கொடுக்கவோ முன்வராத நாம் எவ்வாறு இறைவனை நம் தந்தையென்று அழைக்க முடியும், புனித மரியாளை நம் அன்னையென்றும், நம் வழிகாட்டி என்றும் கொண்டாட முடியும்.

இன்றைய இலங்கை தேசமும் நம்மைச் சுற்றி நடக்கும் நிகழ்வுகளும் அழைத்தவர் உயிர்ப்பிக்க வல்லவர் என்ற நம்பிக்கையோடு பலியிட முன்வாருங்கள் என்ற அழைப்பினை தருகின்றது. அன்னையின் விழாவும் இம்மாதமும் இன்னும் நம்முள் இறைநம்பிக்கையை ஆழப்படும் நாட்களாய் அமையட்டும் என உங்களை வாழ்த்துகின்றேன்.

தொடர்ந்து சந்திப்போம்
இறைவன் உங்களை ஆசீர்வதிப்பாராக

ஆசிரியர்!



# படித்ததில் பிடித்தது

## சேறு



குழிக்குள் விழுந்துவிட்டது கழுதை ஒன்று
பார்த்தவர் பலரும் பரிகாசம் பேசினர்.

கண்ட கவிஞர்கள் கவி பாடினர்:
"கழுதை கெட்டால் குட்டிச் சுவரா?
இல்லையில்லை.
கழுதை கெட்டால் குட்டிக் குழி"

சிறுவர்கள் கழுதை மேல் மண்ணையும்
கல்லையும் எறிந்தார்கள்.
பெரியவர்கள் அதன் மேல் குப்பைகளைக்
கொட்டினார்கள்.

அடிபட்டுக் குப்பையோடு குப்பையாகக் கிடந்த கழுதை மனம் தளரவில்லை.
எழுந்து குப்பைக்குள் காலூன்றியது.
மெல்ல மெல்லத் திமிறி எழுந்தது. குழியை விட்டுக் குதித்து வெளியேறியது.

குப்பைக்குள் புழுக்களைத் தேடிய சேவல் இதைக் கண்டு கூவியது:
"வீண் பழிகளும் வசவு வார்த்தைகளும்...
விழுந்து கிடப்பவனுக்கு வீரியம் தரலாம்
விடுதலையும் தரலாம்."

*விழுவதில் தவறில்லை, விழுந்தே கிடப்பதுதான் தவறு,,,*

**அருட்பணி T. கிங்ஸிலி றொபட்**

# சுதேச குருக்கள் தின காணிக்கை

| இல | பங்குகள் | தொகை |
|---|---|---|
| 01 | புனித மரியாள் பேராலயம் – திருகோணமலை | 54,850.00 |
| 02 | இறை இரக்கத்திருத்தலம் – அலஸ்தோட்டம் | 32,310.00 |
| 03 | புனித சூசையப்பர் ஆலயம் – நிலாவெளி | 28,510.00 |
| 04 | புகுழந்தை இயேசு ஆலயம் – உவர்மலை | 23,100.00 |
| 05 | புனித குவாடலூப்பே அன்னை ஆலயம் – திருகோணமலை | 22,250.00 |
| 06 | புனித சதாசகாய அன்னை ஆலயம் – அன்புவழிபுரம் | 21,140.00 |
| 07 | திரு இருதய ஆண்டவர் ஆலயம் – இருதயபுரம் | 14,000.00 |
| 08 | புனித வேளாங்கன்னி ஆலயம் – ஆண்டாங்குளம் | 8,360.00 |
| 09 | புனித அந்தோனியார் ஆலயம் – மூதூர் | 8,100.00 |
| 10 | புனித திருமுழுக்கு யோவான் ஆலயம் – சாம்பல்தீவு | 7,500.00 |
| 11 | புனித அந்தோனியார் ஆலயம் – சீனக்குடா | 7,000.00 |
| 12 | புனித பாத்திமா அன்னை ஆலயம் – தம்பலகமம் | 6,608.00 |
| 13 | புனித வனத்து அந்தோனியார் ஆலயம் – செல்வநாயகபுரம் | 6,270.00 |
| 14 | புனித சதாசகாய அன்னை ஆலயம் – கந்தளாய் | 6,000.00 |
| 15 | கிறிஸ்து அரசர் ஆலயம் – கன்னியா | 5,500.00 |
| 16 | புனித லூர்து அன்னை திருத்தலம் – பாலையூற்று | - |
| 17 | புனித யூதாததேயு ஆலயம் – இலிங்கநகர் | 5,600.00 |
| 18 | புனித செபமாலை மாதா ஆலயம் – குச்சவெளி | - |
| | மொத்தம் | **257,098.00** |

## எகெட் கரித்தாஸ் நிறுவனத்தின் தவக்கால கல்வித்திட்டம் - 2022 பங்குரீதியான பங்களிப்பு

புனித செபமாலை மாதா ஆலயம் (குச்சவெளி) - 16,700.00

## இறைஇயேசுவில் பிரியமான சகோதர சகோதரிகளே!

## இன்னுமா தயக்கம் – 24

ஆனந்த ராஜன் ஒரு மருத்துவர் அவரது மருத்துவமனையில் வசதிகள் மிக அதிகம் இல்லையென்றாலும் மக்கள் கூட்டம் அங்கு தான் அதிகமாக வந்து கொண்டிருந்தது. அவரது மருத்துவமனைக்கு அருகில் மகிழ்வேந்தன் ஒரு மருத்துவமனையை ஆரம்பித்தார். மருத்துவத்திற்குத் தேவையான அனைத்து வசதிகளையும் அவர் தன் மருத்தவமனையில் உருவாக்கியிரந்தார். ஆனால், மக்கள் அவரது மருத்துவமனைக்கு செல்வதே இல்லை. ஒரு நாள் ஆனந்தராஜனின் மருத்துவமனைக்கு மகிழ்வேந்தனின் மருத்துவமனையை தாண்டிச் சென்றுகொண்டிருந்த நோயாளி ஒருவரை அழைத்து மகிழ்வேந்தன் விசாரிக்கின்றார். "நீங்கள் ஏன் என்னுடைய மருத்துவமனைக்கு வராமல் அங்கே செல்கிறீர்கள்?" மகிழ்வேந்தன் கேட்ட கேள்விக்கு அந்த நோயாளியின் பதில் சற்று அவரை சிந்திக்கச் செய்தது. "நீங்கள் ஒவ்வொரு நோய்க்கும் ஒரு குறிப்பிட்ட விலையை நிர்ணயித்து பணத்தால் மருத்துவம் பார்க்கிறீர்கள், ஆனால் ஆனந்தராஜன் எங்கள் நோயை பணத்தால் அல்ல மனத்தால் மருத்துவம் பார்க்கின்றார். அவருக்கு எங்கள் மீது தான் பாசமே தவிர நாங்கள் கொடுக்கும் பணத்திலல்ல…"

மகிழ்வேந்தன் பல நாட்களாக சிந்தித்து ஒரு முடிவுக்கு வருகின்றார் அதன் படி சில விளம்பரப் பலகைகளை தன் மருத்துவமனைக்கு முன் வைக்கின்றார். அந்த விளம்பரங்களை அந்த ஊரின் முக்கிய வீதிகளிலும் வைக்கின்றார். அதன் பின் அவரது மருத்துவமனையில் தான் கூட்டம். ஆனந்த ராஜனின் மருத்துவனையில் எந்தக் கூட்டமும் இல்லை. கொஞ்ச நாளிலேயே அவர் தனது மருத்துவமனையை மூடிவிட்டு வெளியூருக்கு சென்றுவிடுகின்றார்.

சிறிது காலம் கழித்து அக்கம் பக்கத்திருந்து எல்லாம் மக்கள் மகிழ்வேந்தனின் மருத்துவமனையை நாடி வருகின்றனர். மிகவும் மிகவும் கைராசிக்கார மருத்துவர் இவரது மருத்துவமனையில் அனைத்து வசதிகளும் உள்ளன. எந்த நோயாக இருந்தாலும் அவர் எளிதாகக் குணப்படுத்திவிடுவார் என்றெல்லாம் மக்கள் புகழ்ந்து கொண்டிருந்தார்கள். அப்போது ஆனந்தராஜன் அந்த ஊருக்கு ஒரு வேலையாக வருகின்றார். அவர் மகிழ்வேந்தனை சந்திக்கின்றார். அவர்களிடையே நடந்த உரையாடல்:

## தீ நடுவே நீ நடந்தாலும்…

ஆனந்தராஜன்: என்ன மகிழ்வேந்தன், மிகவும் மகிழ்ச்சியாக இருக்கின்றீர்கள் போலிருக்கிறது? உங்கள் மருத்துவமனையில் இவ்வளவு கூட்டம் இப்போது கூட ஆரம்பித்துவிட்டதே எப்படி இதை சாத்தியமாக்கினீர்கள்?

மகிழ்வேந்தன்: ஐயா, நீங்கள் இந்த மக்களுக்கு மருத்துவம் பார்க்கத்தான் இந்த ஊருக்கு வந்தீர்கள், நானும் அதற்காகக் தான் வந்தேன். ஆனால் காலப்போக்கில் நீங்கள் காணாமற்போய்விட்டீர்கள் ஆனால் நிலைத்து நிற்கிறேன். இதற்குக் காரணம் என்ன என்றால் மக்கள் மத்தியில் பிரபலமாகவேண்டும். மக்கள் மனதில் யார் பிரபலம் என்று நினைக்கின்றார்களோ அவர்களுக்கே அவர்கள் மதிப்பு கொடுக்கின்றார்கள். ஒரு காலத்தில் நீங்கள் மக்கள் நலனே முக்கியம் என்று நினைத்து மருத்துவம் செய்தீர்கள் அதனால், வருகின்ற நோயாளிகளை உடனடியாக குணப்படுத்தி வீட்டிற்கு அனுப்பி விடுவீர்கள். அவர்களும் உடனடியாக உங்களை மறந்துவிடுவார்கள். உங்களை பெரியவர் என்று நினைப்பதற்கு அவர்களுக்கு அவகாசமே கிடைக்காது. ஆனால், நான் என் மருத்தவமனையை ஆரம்பித்தது பெரிய அளவில் இலாபம் சம்பாதிப்பதற்காக எனவே ஒரு நாள் வரும் நோயாளியை அந்த நாளே குணப்படுத்தி அனுப்புவதற்குப் பதிலாக அவர்களை என் வாடிக்கையாளர்களாக மாற்றினேன் ஒரு நோய் என்று வந்தால் அந்த நோயை மட்டும் அவர்கள் கருத்தில் கொள்ளக் கூடாது. அவர்களுக்கு இன்னும் பல நோய்கள் இருக்கின்றன என்பதை அவர்களே நம்பும்படியாக சில கருத்துக்களை அவர்களக்குக் கூறுவேன். அவர்கள் என்னை பெரிய மருத்துவர் என்று நம்பினர். தாங்கள் நம்பியவற்றை அனைவருக்கும் அறிவித்தனர். அதனால், இந்த ஊரிலிருந்து மட்டுமல்ல பல ஊர்களிலிருந்தும் என் மருத்துவமனைக்கு நோயாளிகளாக வாடிக்கையாளர்கள் வந்த வண்ணம் இருக்கின்றார்கள்!



இதைக் கேட்ட ஆனந்தராஜன் சற்று மன வேதனையுடன் "நீ இந்த வேலையைத் தான் செய்து கொண்டிருக்கின்றாய் என்று நான் அறிவேன். ஆனால் ஒரு காலம் வரும் மக்கள் உன்னைப் பற்றி புரிந்து கொள்வார்கள் அப்போது நீ மிக துன்பப்படுவாய் !" என்று சொல்லிவிட்டு அந்த ஊரைவிட்டு புறப்படுகின்றார்.

## தர்மத்தின் வாழ்வு தனை சூது கௌவும்…

அன்பார்ந்த சகோதர சகோதரிகளே,

அறிவியல் மற்றும் தொழில் நுட்பம் அதிக உச்சத்திற்கு வளர்ந்திருக்கும் இந்தக் காலத்தில் மக்களின் அறியாமையை மிக தெளிவாகக் காட்ட இந்த உதாரணத்திற்கு மேல் எதையும் காட்ட முடியாது. இந்த நிலையில் நாம் என்ன தான் நன்மை செய்தாலும் நமக்கு எந்த நல்ல விளைவும் எற்படுவதே இல்லையே, அப்படியானால் நான் ஏன் நல்லவனாக இருக்க வேண்டும்? என்று கேட்கும் பலரது கேள்விகளுக்கும் இங்கே உரக்க ஒலிக்கத் தான் செய்கின்றன. ஒவ்வொருவரும் இந்த சமுதாயத்தில் நல்லவர்களாக வாழ்ந்ததற்காக வாழ்வதற்காக மிகவும் வேதனையையே தான் பெறுகின்றார்கள். அப்படியானால் ஆண்டவர் கற்றுக் கொடுத்த விழுமியங்களுக்கு என்ன அர்த்தம்? ஆண்டவரின் விழுமியங்களை வாழ்வதால் நாம் மனநிறைவைத் தர முடியாதா? என்ற கேள்விகளக்குத் தான் ஆண்டவரின் உயிர்ப்பு நமக்கு ஒரு சிறந்த பதிலைத் தருகின்றது.



## தர்மம் மீண்டும் வெல்லும்…

உயிர்ப்புக் காலத்தில் நாம் இருக்கின்றோம். இந்த காலம் நம் அனைவருக்கும் மகிழ்ச்சியான காலமாக அமைந்துள்ளது. காரணம் உயிர்ப்புக் காலம் நமக்கெல்லாம் நம்பிக்கை தரும் காலமாக அமைந்துள்ளது.

## தீ நடுவே நீ நடந்தாலும்…

இயேசு பாடுகள் பட்டார். எத்தகைய பாடுகள் என்று எண்ணும் போது நமது உடல் பதபதைக்கும் அவரது சாவு அவ்வளவு கொடூரமானதாகும். ஆனால் இயேசு அதை மனமுவந்து ஏற்றுக் கொண்டார். தனது சாவை அவர் முன்னரே அறிந்திருந்தும் அவர் தப்பிச் செல்ல முயற்சி செய்யவில்லை, மாறாக அவர் தனது சாவை தானே முன்வந்து ஏற்றுக் கொள்கின்றார். ஆனால் அவரது சாவினால் யாருமே எந்த அர்த்தத்தையும் பெற்றுக் கொள்ளவில்லையே என்று எண்ணும் போது நமக்கு சற்று வேதனையாக இருக்கும். அவரது சீடர்கள் கூட அவரை விட்டுவிட்டு ஓடிவிட்டனர். இயேசுவே, வாழ்வு தரும் வார்த்தைகள் அனைத்தும் உம்மிடமே உள்ளன என்று கூறிய பேதுரு கூட மும்முறை மறுதலித்துவிட்டார். அப்படியானால், இயேசுவின் வாழ்வு, விழலுக்கு இறைத்த நீராகிவிட்டதா? இயேசுவின் வாழ்வு, சிலுவையின் வேதனையோடு மறைந்துவிட்டதா? என்ற வேதனையான கேள்விகள் எழும் போது தான், நமக்கு ஒரு சிறந்த நம்பிக்கையூட்டும் செயலாக அவரது உயிர்ப்பும் தூய ஆவியாரின் வருகையும் நிகழ்கின்றன.

அவரது உயிர்ப்புக்கு பின், ஆங்காங்கே பிரிந்து சிதறிச் சென்ற சீடர்கள் ஒன்றிணைகிறார்கள். ஒன்றாக மேலறையில் இணைந்து ஜெபித்துக் கொண்டிருக்கின்றார்கள். தூய ஆவியாரின் வருகை அவர்களை இன்னும் திடப்படுத்துகின்றது. அவர்கள் துணிவோடு இறைவார்த்தையைப் போதிக்க ஆரம்பிக்கின்றார்கள்.

நாம் நல்லன செய்யும் போது தொடக்கத்தில் அது பயனற்றது போல தோன்றலாம். அனால், நன்மை ஒருபோதும் தீமையை விளைவிக்காது நல்லவர்கள், தீயவர்கள் மத்தியில் சக்தியற்றவர்களாகவும் தீ நடுவே நடக்கும் சிறு எறும்பு போலவும் தோன்றலாம். ஆனால் நன்மை ஒருபோதும் பலனற்றதாகப் போகாது அது ஏதாவது ஒரு உருவத்தில் பலன் கொடுத்தே தீரும். எனவே நாம் நன்மை செய்வதில் ஓய்ந்து போக வேண்டாம். தீமையின் வளர்ச்சியைப் பார்த்து மலைத்துப் போக வேண்டாம். "தர்மத்தின் வாழ்வு தனை சூது கௌவும். ஆனால், தர்மம் மறுபடியும்வெல்வும்!" என்ற படிப்பினையையே இயேசுவின் உயிர்ப்பு நமக்குக் கற்றுத் தருகின்றது.

## இன்னுமா தயக்கம்?

எனவே அன்பார்ந்தவர்களே! இன்னும் என்ன தயக்கம்? நாம் நமது இயல்பான நன்மையில் நிலைத்திருப்போம். நன்றி!

இறையாசீருடன்
அருட்பணி. அலெக்ஸ் செல்லையா க.ச

# உடல் இறையியலும் பாலுணர்வின் நடவடிக்கைகளும்

## ஏதேன் தோட்ட மனிதர்கள்

பாலுணர்வு என்பது மிக முக்கியமான மற்றும் புனிதமான ஒரு விடயமாகும். ஆனால் இன்று உலகில் பலர் அதனை பிழையான கண்ணோட்டத்தில் பார்க்கின்றனர். வேறு சிலர் அதனை வியாபாரமாக்கி இலாபம் அனுபவிக்கின்றனர். இந்நிலையிலேயே திருத்தந்தை 2ம் ஜோன் போல் இதனை உடல் இறையியலின் முன்முதல் அனுபவங்கள் மற்றும் மனித உடலின் நோக்கங்கள் ஆகியவற்றை கற்றுக்கொண்டோம். இந்த இறுதிப்பகுதியில் அந்த கோட்பாடுகளின் ஒளியில் மனித பாலுணர்வியல் சம்பந்தப்பட்ட செயல்களை ஆராய்வோம்.

### திருமணம்

இயேசுவின் காலத்தில் திருமணம் உயர்ந்த ஒரு விடயமாக காணப்படவில்லை நாம் முன்னைய வெளியீடுகளில் அறிந்தவாறு மனிதனின் முன்முதல் அனுபவங்களாக முதல் தனிமை, முதல் ஒன்றிப்பு, முதல் ஆடையின்மை, முதல் பாவம் ஆகிய நான்கு விதமான அனுபவங்கள் திருமணம் என்பது ஒரு உடன்படிக்கை என்பதை எமக்கு தெளிவுபடுத்துகின்றன. இயேசுவின் காலத்தில் விவாகரத்து பரவலாக வழங்கப்பட்டது. மோசேயின் சட்டப்படி விவாகரத்து வழங்கப்பட்டது. அது மனிதர்களின் கடின உள்ளம் பொருட்டு அனுமதிக்கப்பட்டதாக நாம் விவிலிய ஏடுகளில் வாசித்தோம். இரண்டாவதாக இயேசுவின் காலம் இஸ்ரயேல் உரோமையர்களின் ஆட்சியின் கீழ் இருந்த காலமாகும். ஆண்கள் திருமணம் செய்வதில் ஆர்வம் காட்டாத ஒரு மனநிலை இயேசுவின் காலத்தில் நிலவியது உரோம் அரசன் ஆண்கள் கட்டாயம் திருமணம் புரிய வேண்டும் என ஆணை பிறப்பித்தான். ஆயினும் ஆண்கள் சுதந்திரமாக வாழ தொடங்கினர். இந்த நிலையில்தான் இயேசு ''தொடக்கத்திலே'' என்கின்ற இறையியல் சிந்தையில் உள்ள திருமணம் தொடர்பான விடயங்களை விளக்குகின்றார்.

### திருமணம் என்னும் உடன்படிக்கை

இறைவன் தொடக்கமுதல் மக்களோடு பல உடன்படிக்கைகளை ஏற்படுத்தினார். நோவா, ஆபிரகாம், மோசே ஆகியோரோடு ஏற்படுத்தினார். வழமையாக உடன்படிக்கை இரத்தத்தில் "எழுதப்படும்" அதாவது உடன்படிக்கை செய்வோர் பொருட்களை அல்ல மாறாக தங்களையே பரிமாற்றிக் கொண்டனர். இறைவன் உடன்படிக்கை வழியாக தன்னையே தருகின்றார். அதுபோல் உடன்படிக்கைகளில் ஈடுபடும் எம்மையும் முழுமையாக தரும்படி கேட்கிறார்.



தொடக்கத்திலே "இறைவன் மனிதனை ஆணும் பெண்ணுமாக படைத்தார் என்றும் ஆண் தன் தாய் தந்தையை விட்டு தன் மனைவியோடு இணைந்திருப்பார்கள் என்றும் அவர்கள் இனி இருவர் அல்ல ஒரே உடல்" என்று தொடக்கநூலில் வாசிக்கின்றோம். இந்த வார்த்தைகள் திருமணம் உடன்படிக்கையை குறிக்கின்றன. ஆணும் பெண்ணும் ஒருவரையொருவர் ஏற்றுக்கொள்வதோடு மட்டுமல்ல ஒருவரையொருவர் தற்கையளிக்கின்றனர். ஒருவர் மற்றையவரின் சுயத்தை தற்கையளித்து ஏற்றுக்கொள்கின்றனர். இதனூடாக கணவனும் மனைவியும் முறிவுபடாத ஒரு இணைப்பை ஏற்படுத்திக் கொள்கின்றனர்.

பழைய ஏற்பாட்டில் மக்கள் பல்வேறு செயல்கள் ஊடாக உடன்படிக்கைகளில் பங்கேற்றனர். பலி செலுத்துதல், விருத்தசேதனம் செய்தல், ஒரு ஆண் பெண்ணை திருமணம் செய்தல் ஆகியனவும் இருந்தன. புதிய எற்பாட்டில் இறைமைந்தன் இயேசுவே தனது பாடுகள், மரணம் வழியாக உடன்படிக்கை ஏற்படுத்தினார். நாம் திருப்பலியில் பங்கெடுப்பதன் ஊடாக இந்த உடன்படிக்கையில் நம்பிக்கையில் பங்கெடுக்கின்றோம். அதேபோல் திருமணம் ஒரு அருளடையாளம் என்ற வகையில் இயேசுவின் பதிய உடன்படிக்கையோடு நெருங்கிய தொடர்புடையதாய் இருக்கின்றது. ஆணும் பெண்ணும் திருமணம் புரியும்போது இந்த அருளடையாள அருளை பெற்றுக்கொள்கின்றனர். இறைவன் அந்த உடன்படிக்கை ஊடாக தன் அன்பை ஒருவருக்கொருவர் வழங்கி உடன்படிக்கையில் பங்கெடுக்க அழைக்கின்றார்.

ஏதேன் தோட்டத்தில் ஆதாமுக்கு நீண்ட "உறக்கம்" ஏற்படுத்தி அவனின் விலா எலும்பை எடுத்து ஒரு பெண்ணாக வடிவமைத்த இறைவன் அவளை ஆணிடம் அழைத்து வருகின்ற விடயம் இறைவன் திருமணத்தை ஏற்படுத்துவதை குறிக்கின்றது. ஆகவே திருமணம் என்பது இறைவனின் கொடையாகும் அது இறைவனின் படைப்பாகும். திருமணம் ஒரு கண்ணாடிப்போல இறைமனித அன்பையும் பிரதிபலிக்கின்றது. ஒவ்வொரு மனிதனும் இறைவனின் சாயலாகவும் பாவனையாகவும் படைக்கப் பட்டிருக்கிறான். இதனூடாக அவர்கள் இறைவாழ்வில் பங்கெடுக்கின்றனர். திருமணம் இறைவனின் உடனிருப்பையும் உடன்படிக்கையையும் உலகில் நிலைநிறுத்துகின்றது. மணத்துணைவர்கள் திருமணத்தின் ஊடாக தங்கள் உறவில் உறுதியாகவும் இறைவன்னி சாயலாகவும் திகழ விரும்புகின்றார்கள்.

இறைவன் மனிதன் தனியாக இருப்பது நல்லதல்ல மாறாக ஒரு குடும்பமாக இருப்பதையே விரும்புகின்றார். இறைவனும் தந்தை மகன் தூய ஆவி என்றும் குடும்பமாக வாழ்கிறார். எனவே மனிதன் உறவோடும், நட்போடம் வாழ வேண்டும் என்று இறைவன் விரும்புகிறார்.

ஆகவே திருமணத்தின் போது இணையும் தம்பதியர் ஒரு குடும்பமாக மாறி இறைவனின் சாயலைப் பெறுகின்றனர் என்கிறார் திருத்தந்தை ஜோன் போல், அவர்கள் இறை அன்பின் சாட்சிகளாக திகழ்கின்றனர்.

மனிதன் இறைவனின் சாயல் என்று கணிக்கப்படுவது தனிமையில் அல்ல மாறாக அவன் மனித ஆள்களின் கூட்டுறவு அல்லது நட்பிலேயே அதிகம் வெளிப்படுத்துகின்றான் என்கிறார் திருத்தந்தை. ஏதேன் தோட்டத்தில் ஆதாம் தனியாக இருந்தார். அவன் இறைசாயலாக படைக்கப்பட்டிருந்தான். ஆனால் இறைசாயலை முழுமையாக பிரதிபலிக்கவில்லை. அவனின் தனிமை ஒரு குறைபாடாகவே காணப்பட்டது. அவன் ஏவாளோடு இணைந்த பிறகுதான் முழுமை அடைந்தான். ஒருடலாக மாறினான். "God is made present more by communion than by soli- tude." நாம் தாம் தனிமையில் அல்ல மாறாக குழுவாக செயற்படும்போதே இறைசாயலை முழுமையாக பிரதிபலிக்கின்றோம்.

ஆகவே திருமணம் என்பது ஓர் உடன்படிக்கை ஆகும். அவ்வுடன்படிக்கை ஊடாக தம்பதியினர் இறைவனின் சுபாவத்தில் பங்கெடுக்கின்றனர். இவ்வுடன்படிக்கை மூலம் முதலாவதாக, ஆணும் பெண்ணும் மரணம் வரை ஒருவருக்கொருவர் பிரமாணிக்கமாய் வாழ இசைகின்றனர்.

13

அவ்வாறே தமது தாம்பத்திய உறவின் மூலம் அந்த இசைவினை ஒரு முழுமைக்கு கொண்டு வருகின்றனர். "Consummation." அதாவது திருமண உறவை ஓர் உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்கின்றனர். ஒரு திருமணம் முறிவுபடா நிலை அடைய மணஒப்பந்தம் மற்றும் பாலுறவு ஆகிய இரண்டும் அத்தியாவசிய நிகழ்வுகள் ஆகும். இதனூடாகவே மணத்துணைவர்கள் ஒருடலாக மாறி பிளவுபடா நிலையை அடைகின்றார்கள். மணஒப்பந்தம் உடலுறவு ஆகிய இரண்டும் இரு செயல்கள் ஆயினும் அவை பிரிக்க முடியாதது என்கிறார் புனித ஜோன் பவுல் இதனூடாகவே உடன்படிக்கை நிலை நிறுத்தப்படுகின்றது.

ஜெ. கிறிஸ்டிப்போல்
இயக்குனர்
குடும்ப அப்போஸ்தலிக்க பணியகம் – கண்டி

# திருமுழுக்குத் தொட்டி

அருட்பணி . ம. அலெக்சாண்டர்

வாழ்வு சார்ந்த வழிபாடு – 14

கோவிலின் அமைப்பிலும், இறையியலிலும் நடைமுறைப் பயன்பாட்டிலும் முக்கியத்துவம் பெறுவது - திருமுழுக்குக் கூடம் (Baptistry) அல்லது திருமுழுக்குத் தொட்டி (Baptismal Font) இது கோவிலின் திருப்பீடத்திலுள்ள பீடம் வாசகமேடை, தலைமையேற்பவரின் இருக்கை ஆகியவற்றோடு பிரிக்க முடியாத தனித்துவமான தொடர்பில் இருக்கிறது. கிறிஸ்தவ வாழ்வின் தொடக்கமாய், அடித்தளமாய், வாயிலாய் இருக்கிற திருமுழுக்கு அருளடையாளம் நிகழ்கிற இந்த இடத்தின் தேவை, அமைப்பு, பயன்பாடு, வரலாறு, இறையியல் ஆகியவற்றை விளக்கமாகக் காண்போம். தொடக்கத்திலேயே ஒன்றைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். கோவிலின் வாயில்களில் வைக்கப்படுகிற புனித நீர் பாத்திரத்தை (தீர்த்தம்) இங்கு குறிப்பிடவில்லை திருமுழுக்கிற்கென்றே அமைக்கப்படுகிற தொட்டியைப் பற்றியே குறிப்பிடுகிறேன்.

தொடக்கத்தில், திருமுழுக்கு நீர் பாய்ந்தோடுகின்ற ஆறுகள் அல்லது ஓடைகளில் நிகழ்ந்தது. இயேசுவும் யோர்தான் ஆற்றில் யோவானிடம் திருமுழுக்குப் பெற்றார். (மாற் 1:9) திருத்தூதர் யோவானிடம் திருமுழுக்குப் பெற்றார். (மாற் 1:9) திருத்தூதர் பணி நூலில், பிலிப்பு எத்தியோப்பிய நிதியமைச்சரான திருநங்கையை சந்தித்த நிகழ்வில், தண்ணீர் இருந்த ஓர் இடத்துக்கு வந்ததும் “இதோ, தண்ணீர் உள்ளதே, நான் திருமுழுக்குப் பெற ஏதாவது தடை உண்டா?” (திப 8:36) என்று திருநங்கை கேட்டதாக நாம் காண்கிறோம். திருமுழுக்கு அருளடையாளம் தண்ணீர் மிகுதியாக இருப்பதையும், முழுமையாக தூய்மையடைவதையும் குறித்துக் காட்டுகின்றது. காலப்போக்கில், கோவில்கள் கட்டப்பட்ட பின்னர் நீர்நிலைகளைத் தேடிப்போக வேண்டிய நிலை மாறியது. மாறாக கோவில்களிலேயே திருமுழுக்குப் பெறும் வசதி செய்து தரப்பட்டது. அதற்கென நிறுவப்பட்ட திருமுழுக்கக் கூடம் பல தொன்மையான கோவில்களில் இன்றளவும் காண முடிகிறது. திருமுழுக்குக் கூடம் என்பது ஒரு சிற்றாலயம் போன்று அமைந்திருக்கும். மக்கள் கூடி வந்து திருமுழுக்கு அருளடையாளக் கொண்டாட்டத்தில் கலந்து கொள்ளும் விதமாய் கோவிலுக்கு வெளியே தனியாகவோ, அல்லது கோவிலில் ஒரு பகுதியிலோ அமைக்கப் பட்டிருக்கும் (காண் குழந்தைகளுக்கான திருமுழுக்கச் சடங்கு, பொது முன்னுரை எண் 25) திருமுழுக்குத் தொட்டி என்பது மூழ்கியெழும் அளவுக்கு பெரிதாகவோ அல்லது தலையில் மட்டும் தண்ணீர் ஊற்றும் அளவு தூணுடன் கூடிய அகன்ற பாத்திரவடிவிலோ இருக்கும்.

திருமுழுக்கே முதல் அருளடையாளமாக அமைகிறது. இதன் வழியாக நாம் இறைவனின் பிள்ளைகளாகவும், திரு அவையின் உறுப்பினர்களாகவும் மாறகின்றோம்.

கிறிஸ்துவின் இறப்பிலும் உயிர்ப்பிலும் பங்குபெற்று புதுவாழ்வடைகின்றோம். இறைவனின் நடமாடும் கோவில்களாய் அரச குருத்துவ திருக்கூட்டமாய் (1 பேது 2:9) மாறுகின்றோம். மேற்கண்ட திருமுழுக்கு அருளடையாளத்தின் இறையியலை வெளிப்படுத்தும் அடையாளமாக திருமுழுக்குத் தொட்டி அமைந்திருக்கிறது. எனவே, நம்பிக்கையாளர் எளிதில் பார்க்கவும், அனுகவும் கூடிய இடத்தில் இத்தொட்டி நிறுவப்பட்டிருக்கும். இது கருவறைக்கும், கல்லறைக்கும் அடையாளமாக இருக்கிறது (Symbol Tomb & Womb) திருமுழுக்கின் வழியாக ஒருவர் கிறிஸ்துவின் பாடுகளிலும், இறப்பிலும் பங்கேற்று பாவத்திற்கு இறந்து புதுவாழ்விற்குள் உயிர்த்தெழுவதைச் சுட்டிக்காட்டும் வண்ணம் பழங்கால சவப்பெட்டி (Sarcophagus) வடிவில் தொடக்க காலக் கிறிஸ்தவர்கள் வடிவமைத்தனர். இது புதுவாழ்வின் பிறப்பிடமும் ஆகும். கருவறையில் உள்ள குழந்தை பனிக்குடத்திலுள்ள நீரில் உயிர்வளர்த்து பிறப்பது போல, புதுவாழ்வின் தண்ணீரான திருமுழுக்கு நீரில் பிறக்கும் இடமே திருமுழுக்குத் தொட்டி என்றும் இறையியலாளர்கள் கூறுகின்றனர். இது ஒரு சில இடங்களில் எண்கோண (Octogon) வடிவில் (எட்டு பக்கங்களைக் கொண்ட வடிவில்) அமைக்கப்பட்டிருக்கும்.

இதன் இறையியல் பின்னணி ஆழமானது கடவுள் ஆறுநாள்களில் மண்ணுலகைப் படைத்து, ஏழாம் நாள் ஓய்வெடுத்தார். அப்படியெனில் எட்டாம் நாள் மண்ணுலகைக் கடந்த நாள் அது நிலைவாழ்வின் நாள், நிறைவு காலத்தின் நாள், திருமுழுக்கினால் நாம் நிலைவாழ்வின் நாளைத் தொடங்குகிறோம்.



விண்ணகத்திற்கு உரியவர்களாக வாழவும், மேலுலகு சார்ந்தவற்றை நாடவும் (கொலோ 3:1 - 4) அழைக்கப்பட்டதையும் அனுப்பப்படுவதையும் குறிக்கிறது இந்த எண்கோண வடிவம்.

நோவாவின் பெட்டகத்தில் எட்டுபேர் காப்பாற்றப்பட்டனர். தண்ணீரிலிருந்து புதுவாழ்வைப் பெற்ற அந்த எட்டு பேரைப் போல, திருமுழுக்கினால் பழைய பாவ இயல்புக்கு இறந்து, பிறப்பு நிலைப்பாவம் போக்கப்பட்டு நாமும் புதுவாழ்வு பெறுகிறோம் என்பதையும் இந்த எண்கோண வடிவம் சுட்டி நிற்கின்றது. திருமுழுக்கின் இறையியலைக் குறிக்கும் காட்சிகளோ குறியீடுகளோ பொறிக்கப்பட்டிருக்கும் இயேசு யோவானிடம் திருமுழுக்குப் பெறுதல், புறாவடிவில் தூய ஆவியார் இறங்கி வருதல், விண்ணகத்தின் நான்கு ஆறுகள் (தொ. நூ 2:10 - 14) கிறிஸ்துவைக் குறிக்கும் எழுத்துக்கள், செம்மறி, நல்லாயன், திருச்சிலுவையின் வெற்றியால் தான் மீட்பு கிடைக்கப்பெற்றது என்பதைக் குறிக்க திருமுழுக்குத் தொட்டியின் மீது திருச்சிலுவை அமைக்கப்பட்டிருக்கும்.



செங்கடலைக் கடந்து வந்த இஸ்ரயேல் மக்கள் அடிமை நிலையிலிருந்து உரிமை வாழ்வுக்குக் கடந்து வந்தது போல, திருமுழுக்குத் தண்ணீர் பாவ அடிமைத்தனத்தை விலக்கி புதுவாழ்வைத் தருவதைச் சுட்டிக்காட்டும் விதமாக ஒருசில பழமையான கோவில்களில் செங்கடலைக் கடத்தல் நிகழ்வும் சித்தரிக்கப்பட்டுள்ளது.

திருமுழுக்குத் தொட்டி கோவிலின் முக்கியமான பகுதியில் அமைக்கப்பட்டிருக்க வேண்டும். ஏனெனில், இதுவே புகுமுக அருளடையாளங்களில் தொடக்கமாவும் மற்ற அருளடையாளங்களோடு நெருங்கிய உறவிலும் இருக்கின்றது. திருமுழுக்கில் தொடங்கியதை உறுதிப்பூசுதலும், நற்கருணையும் முழுமைப்படுத்துகின்றன. திருமணமும் குருத்துவமும் திருமுழுக்கில் தொடங்கிய நம்பிக்கை வாழ்வை வாழ்வதற்கான வழிகளாய் இருக்கின்றன. பாவ மன்னிப்பு அல்லது ஒப்புரவு வழியாக நம்பிக்கையாளர்கள் மனமாற்றம் பெற்று திருமுழுக்கின் அருளைப் புதுப்பித்துக் கொள்கின்றனர். கிறிஸ்தவ அடக்கச் சடங்கில் திருமுழுக்கில் தொடங்கிய பயணம் நிறைவை நோக்கிச் செல்கிறது. இப்படி மற்ற அருளடையாளங்களோடும், இறுதிப் பயணத்தோடும் உறவில் இருக்கிற திருமுழுக்கைச் சுட்டிக்காட்டும் வண்ணம் திருமுழுக்குத் தொட்டி கோவிலின் முக்கியமான இடத்தில் அமைந்திருக்க வேண்டும்.

கோவிலில் திருப்பீட முற்றத்திற்கு முன்னே இடப்புறமாகவோ, கோவிலின் வாயிலருகிலோ அமைக்கப்பட்டிருந்த திருமுழுக்குத் தொட்டி 20ம் நூற்றாண்டு திருவழிபாட்டுச் சீர்திருத்த இயக்கத்திற்குப் பின், கோவிலின் முக்கிய வாயிலருகில் அமைவது பொருத்தமென ஏற்றுக் கொள்ளப்பட்டது. கிறிஸ்தவ வாழ்விற்கு தொடக்கமாகவும், எல்லா அருளடையாளங்களோடும் உள்ள உறவின் வெளிப்பாடாகவும் திருமுழுக்குத் தொட்டி அமைகிறதினால் அதனை ஒவ்வொரு முறையும் காணும் போது கிறிஸ்தவ நம்பிக்கையாளர் தனது அர்ப்பணிப்பை நினைவு கூரவும், புதுப்பிக்கவும் வாய்ப்பாக அது கோவிலின் வாயிலருகே உட்புறத்தில் அமைவது சிறந்தது.

திருமுழுக்குப் பெறும் ஒருவர் திருமுழுக்குத் தண்ணீர் வழியாகவே பீடத்தை நோக்கிப் பயணிக்கிறார். இதனைக் குறித்துக் காட்டும் விதமாகவே, திருமுழுக்குத் திருச்சடங்கில் கோவிலின் நுழைவாயிலில் வரவேற்கப்பட்டு கோவிலுக்குள்ளே அழைத்துவரப் படுகின்றோம்.தொடர்ந்து வாசகமேடைக்கு வாசக வழிபாட்டிற்காக கூட்டிவரப்பட்டு, முடிந்ததும் திருமுழுக்குத் தொட்டிக்கு கொண்டுவரப்படுகின்றோம். திருமுழுக்குப் பெற்ற பின் நிறைவாக, பீடத்திற்கு வந்து இயேசு கற்பித்த இறைவேண்டலை மன்றாடி இறுதி ஆசீரைப் பெறுகிறோம். கூர்ந்து கவனித்தால் இத்திருச்சடங்கு நாம் தொடங்கியுள்ள கிறிஸ்தவ வாழ்வு பயணத்தைச் சுட்டிக்காட்டுகின்றது.

தொடரும் ...

# திருகோணமலை மறைமாவட்டததில் சுதேச குருக்கள் தினம் 2022

பாப்புரைமறைபரப்புச் சபைகளின் சுதேச குருக்கள் தினம் ஆயர் தலைமையில் நிலாவெளி புனித சூசையப்பர் ஆலயத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. தேவ அழைத்தல் பற்றியும், குருக்களுக்காக ஜெபித்தல் பற்றியும், பிராமாணிக்கத்தோடு குருக்களுக்குப் பணிவிடை செய்வது பற்றியும் ஆயர் தனது மறையுரையில் விளக்கிக் கூறினார். அன்றைய நாளில் 79 சிறார்களுக்கு நிரந்தர சின்னம் சூட்டி அவர்கள் திருப்பாலத்துவ சபையில் நிரந்தரமாக இணைத்துக் கொள்ளப்பட்டார்கள். இம்மறைமாவட்ட சிறப்புத் திருப்பலி நிறைவேற உதவியாயிருந்த பங்குத்தந்தை, ஊக்குவிப்பாளர்களுக்கு நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம். தலைமைதாங்கிய ஆயர் மறைமாவட்ட இயக்குனர் அவர்களையும் நன்றியோடு நினைக்கிறோம்.











## பாலையூற்று லூர்து அன்னை திருத்தலத்தின் தேவநற்கருணை உறுதிப்பூசுதல்

பாலையூற்று லூர்து அன்னை திருத்தலத்தின் மறைக்கல்வி மாணவர்களுக்கான தேவநற்கருணை, உறுதிப்பூசுதல் வழங்கும் நிகழ்வை முன்னிட்டு பெற்றோருக்கான கருத்தமர்வு 16.05.2022 அன்று காலை 9.00 மணி தொடக்கம் 11.00 மணி வரை அருட்பணி எமில் அடிகளாராலும், மாணவர்களுக்கான கருத்தமர்வு அருட்சகோதரி யூஜின் பாத்லட் தலைமையிலும் நடாத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து பெற்றோருக்கும். ஞானப்பெற்றோருக்கும், மாணவர்களுக்கும் ஒப்புரவு அருட்சாதனம் வழங்கப்பட்டது. 21.05.2022 அன்று காலை அதி. வண. ஆயர் கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை 79 சிறார்களுக்கு தேவநற்கருணை உறுதிப்பூசுதல் அருளடையாளங்களை வழங்கி திருப்பலியை நிறைவேற்றினார்.

**- தகவல் திருமதி A. சகாயம்**

## உவர்மலை குழந்தை இயேசு ஆலயத்தில் புனித வின்சன்ட் டீ பவுல் சபை மற்றும் பாடகர் குழாமின் ஒழுங்கமைப்பில் விசேட திருப்பலிக்கொண்டாட்டங்கள்



உவர்மலை குழந்தை இயேசு ஆலய புனித வின்சன்ட் டீ பவுல் சபையினரால் சிறப்பித்த மூவொரு கடவுள் பெருவிழா திருப்பலி 12.06.2022 அன்று பங்குத்தந்தை அருட்பணி செ. சுகுனேந்திரன் குரூஸ் அவர்களின் தலைமையிலும் சபையின் தலைவர் அவர்களின் வழிநடத்தலுடன் ஆலோசனை சபை ஆன்மீக ஆலோசகர், தலைவர் மற்றும் அங்கத்தவர்களால் விளக்கேற்றி மூவொரு கடவுளின் விழாவானது பங்கு சமூகமாக சேர்ந்து சிறப்பிக்கப்பட்டது.

---

உவர்மலை குழந்தை இயேசு ஆலய பாடகர் குழாமினால் சிறப்பித்த கிறிஸ்துவின் தூய்மைமிகு திருஉடல் திருஇரத்த பெருவிழா திருப்பலி 19.06.2022 அன்று பங்குத்தந்தை அருட்பணி செ. சுகுனேந்திரன் குரூஸ் அடிகளின் தலைமையில் கிறிஸ்துவின் தூய்மை மிகு திருஉடல் திருஇரத்த பெருவிழாவை பாடகர்குழாம் பங்கு சமூகத்துடன் இணைந்து திருப்பலியை ஒப்புக்கொடுத்து சிறப்பித்தனர்.




## வரலாறு படிப்போமா?

**HISTORY STUDY CENTER**
**NO. 85 ST. MARY'S STREET**
**TRINCOMALEE**

**(பெரிய கடை மாதா கோயிலின் முன்னால்)**
**க.பொ.த (சா/த) – தரம் 10 வகுப்புகள் நடைபெறுகின்றன.**
**தரம் 6 – 9 ஆகிய வகுப்புகளுக்கு வரலாறு, புவியியல் கற்பிக்கப்படும்**

**ஒவ்வொரு பாடத்திற்கும் வினாத்தாள்**
**இலங்கை உலகப்படம் குறித்தல்**
**மாணவர் சிறந்த வழி காட்டலில்**
**வரலாறு பாடத்தில் தேர்ச்சி பெறுவர்**
**அனுபவம் மிக்க ஓய்வு நிலை அதிபரால் கற்பிக்கப்படுகின்றது**

**தொடர்புக்கு: 0777178757**

**பாடசாலைவிட்ட தனிப்பட்ட மாணவர்களுக்கு வரலாறு பாடத்தில் விசேட வகுப்பு காலை வேளையில் 8.00 – 11.00 மணி வரைக்குள் ஒரு மணிநேரத்தை தெரிவுசெய்யலாம்**

**தொடர்புக்கு: 0777178757**

**இல. 85, புனித மரியாள் வீதி**
**திருகோணமலை.**

# அரையாண்டு அறிக்கை

## திருகோணமலை எகெட் கரித்தாஸ் நிறுவனத்தின் செயற்பாடுகள் – 2022

### 1. உள்நாட்டுப் போரினால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்விக்கான உதவித்திட்டம்
### Educational Support for War Affected Children Project

கடந்த கால உள்நாட்டுப் போரினால் பாதிக்கப்பட்டு தமது உறவுகள், உடமைகள் மற்றும் கல்வியை இழந்து பரிதவித்த 64 மாணவர்களினது கல்வி நடவடிக்கைகளுக்காக கரித்தாஸ் கொரியா நிதியுதவியுடன் மூன்று வருடங்களாக (2019 – 2022) அவர்களுக்குரிய கல்விக்கான உதவிகளைச் செய்துள்ளோம். இப்புலமைப்பரிசில் திட்டத்தில் மாதாந்த உதவி தொகையாக ரூ 3,000.00 வழங்கப்பட்டு வந்ததுடன் அவர்களுக்குரிய மாதாந்தக் கூட்டங்களும், விழுமியக் கருத்தமர்வுகளும், இல்ல மற்றும் பாடசாலை களமேற்பார்வைகளும் நடைபெற்றது.







### Special Coaching on Value Education கருத்தமர்வு

இத்திட்டத்திட்டத்திற்குள் உள்வாங்கப்பட்ட மாணவர்கள் மற்றும் பெற்றோருக்கான கருத்தமர்வு எகெட் கரித்தாஸ் மண்டபத்தில் நடைபெற்றது. இதன் போது 2020ம் ஆண்டில் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற செல்வன் நவநீதன் பிரதீஷன் (7A, 2B), செல்வி சஞ்சிகா காண்டீபன் (6A, B, 2C) ஆகியோரை கௌரவிக்கும் நிகழ்வானது அருட்பணி டன்ஸ்டன் பெட்ரிக் ஜோசப் (பணிப்பாளர், எகெட் கரித்தாஸ், திருகோணமலை) அவர்கள் தலைமை தாங்கி மாணவர்களுக்குரிய விருதுகள் மற்றும் சான்றிதழ்களை வழங்கி வைத்ததுடன் மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்குத் தேவையான கல்வி, வாழ்வியல், சமய விழுமியங்களைப் பற்றியும் கூறினார்.

மேலும் வளவாளர் திரு.A.K.S. அன்டன் அற்புத ராஜ் அவர்கள் அறிவு, திறன், மனப்பாங்கு, கல்வியின் நோக்கங்கள், நேர முகாமைத்துவம், தலைமைத்துவம், மற்றும் SWOT பகுப்பாய்வு தொடர்பிலும் மாணவர்களுடன் கலந்துரையாடியிருந்தார்.






### 2. Enhancing Resilience of the victims of the Economic crisis on Sri Lanka (DRR Project)

இலங்கையில் தற்பொழுது தலைதூக்கியிருக்கும் பொருளாதார மாற்றத்தினாலும், விலையேற்றங்களாலும் பாதிக்கப்பட்டு ஒருவேளை உணவையேனும் உண்ண முடியாத நிலையிலுள்ளவர்களை பட்டினிச்சாவிலிருந்து விடுவிப்பதற்கான இத்திட்டத்தில் திருகோணமலை மறைமாவட்டத்திலுள்ள இன, மத, மொழி வேறுபாடுகளின்றி அனைத்து பங்குகளிலுமுள்ள மற்றும் கிராமங்களிலுள்ள வறிய மக்களைத் தெரிந்தெடுத்து 1,091 பேருக்குரிய உலர்உணவுப் பொதிகள் மற்றும் 70 மாணவர்களுக்கு கல்விக்கான கொடுப்பனவுகளும், 35 நோயாளர்களுக்கு மருத்துவக் கொடுப்பனவுகளும் எம்மால் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் Missionaries of Charity Sisters (MCS) அவர்களுக்குரிய 350 உலர்உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. Chaplaincy of Switzerland இடமிருந்து கிடைக்கப்பெற்ற 5,500Kg அரிசிப் பொதிகளும் எம்மால் வறியோருக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது.

#### உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்ட பங்குகளின் விபரம்

| இல. | பங்கின் பெயர் | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | புனித அந்தோனியார் ஆலயம் – மூதூர் | 110 |
| 02 | திரு இருதய ஆண்டவர் ஆலயம் – இருதயபுரம் | 100 |
| 03 | புனித குவாடலூபே அன்னை ஆலயம் – சின்னக்கடை | 100 |
| 04 | புனித திருமுழுக்கு யோவான் ஆலயம் – (சாம்பல்தீவு, சிலுவைமலை, கோணேசபுரி) | 81 |
| 05 | புனித வனத்து அந்தோனியார் ஆலயம் – செல்வநாயகபுரம் | 68 |
| 06 | புனித சதாசகாய அன்னை ஆலயம் – அன்புவழிபுரம் | 60 |
| 07 | கிறிஸ்து அரசர் ஆலயம் – கன்னியா | 46 |
| 08 | புனித லூர்த்து அன்னை திருத்தலம் – பாலையூற்று | 40 |
| 09 | புனித பாத்திமா அன்னை ஆலயம் – (தம்பலகமம், கப்பல்துறை, விளாங்குளம்) | 32 |
| 10 | குழந்தை இயேசு ஆலயம் – உவர்மலை | 26 |
| 11 | புனித அன்னை வேளாங்கண்ணி ஆலயம் – ஆண்டாங்குளம் | 23 |
| 12 | இறை இரக்கத் திருத்தலம் – அலஸ்தோட்டம் | 20 |
| 13 | புனித யூதாததேயு ஆலயம் – லிங்கநகர் | 15 |
| 14 | புனித மரியாள் பேராலயம் – திருகோணமலை | 09 |
| | மொத்தம் | 730 |

#### உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்ட கிராமங்களின் விபரம்

| இல. | கிராமத்தின் பெயர் | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | சேருவில | 59 |
| 02 | மாங்காயூற்று | 39 |
| 03 | இலுப்பைக்குளம் | 29 |
| 04 | கோபாலபுரம் | 26 |
| 05 | இறக்ககண்டி | 21 |
| 06 | சல்லிக்களப்பு | 21 |
| 07 | நெடுந்தீவு | 20 |
| 08 | மயில்தீவு | 20 |
| 09 | தாமரைக்குளம் | 20 |
| 10 | கப்பல்துறை | 19 |
| 11 | விளாங்குளம் | 19 |
| 12 | ஆத்திமோட்டை | 14 |
| 13 | இக்பாலநகர் | 13 |
| 14 | நாவற்சோலை | 12 |
| 15 | கோவிலடி | 10 |
| 16 | சிறுபிட்டி | 10 |
| 17 | காக்காமுனை | 09 |
| | மொத்தம் | 361 |









### 3. சுற்றுச்சூழல் பாதுகாப்பு செயற்றிட்டம்

இன்றைய காலத்தில் புவியானது வெப்பமடைந்து வருவதனாலும், அதன் விளைவாக பருவ காலநிலைகளில் மாற்றத்தினை ஏற்படுத்துவதாலும் பாரிய அனர்த்தங்கள், இயற்கை அழிவுகள் ஏற்படுகின்றன. இவ்வாறான அழிவுகள் ஏற்படக் காரணம் இயற்கை வளங்களை அழித்தல், சூழலினை மாசுபடுதல் போன்றனவாகும். இந்நிலையை மாற்றுவதற்கு மக்கள் மத்தியில் விளிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடன் இத்திட்டத்தினைச் செயற்படுத்தி வருகின்றோம்.

இத்திட்டமானது திருகோணமலை மாவட்டத்தில் மாங்காயூற்று, இலுப்பைக்குளம், திருமால்புரம், கோபாலபுரம் மற்றும் விளாங்குளம் ஆகிய கிராமங்களில் நடைபெற்று வருகின்றது. ஒவ்வொரு கிராமங்களிலும் சமூகமட்ட குழு, இளைஞர் குழு, சிறுவர் குழுக்களை அமைத்து இந்த இலக்கு குழுக்கள் மூலமாக செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கன்னியா மற்றும் சாம்பல்தீவு கிராமத்தில் இளைஞர் மற்றும் யுவதிகள் இணைந்து மரநடுகையை மேற்கொண்டார்கள்.





தேசிய சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு 2022.06.05ம் திகதியன்று திருகோணமலை சுப்ரா பூங்காவின் கடற்கரைப் பகுதி இளைஞர், யுவதிகள், பங்குதந்தையர்கள், பங்குமக்கள், அரச உத்தியோகத்தர்களுடன் ஆகியோருடன் எகெட் கரித்தாஸ் பணிப்பாளர் மற்றும் பணியாளர்கள் இணைந்து சிரமதானத்துடன் கூடிய துப்பரவுப் பணி இடம்பெற்றது.





கோபாலபுரம் கிராமத்தில் இயற்கை முறையிலான விவசாயத்தை ஊக்குவிக்கும் வகையில் சமூகமட்ட குழுவினருக்கு இயற்கை முறை விவசாயம் சார்ந்த பயிற்சி விவசாயப் போதனாசிரியரினால் நடாத்தப்பட்டதுடன் பங்குபெற்றவர்களுக்கு பயிர்விதைகளும் வழங்கப்பட்டது.





இயற்கை முறையிலான விவசாயத்தை ஊக்குவிக்கும் வகையில் திருகோணமலை விபுலானந்தாக் கல்லூரியில், பாடசாலை மாணவர்களுக்கான இயற்கை முறை விவசாயம் சார்ந்த பயிற்சி விவசாயப் போதனாசிரியரினால் நடாத்தப்பட்டதுடன் பாடசாலை வீட்டுத்தோட்டத்திற்குத் தேவையான மரக்கன்றுகளும், இயற்கை உரமும் வழங்கப்பட்டது.





### 4. சமூக நல்லிணக்கம், சமாதானம் மற்றும் முரண்பாடுகளைத் தவிர்த்தல் சம்பந்தமான செயற்றிட்டம்

இத்திட்டம் தொடர்பாக விளக்கமானது திருகோணமலை உவர்மலையிலுள்ள இளைஞர்களின் மத்தியில் கலந்துரையாடல் மூலம் வழங்கப்பட்டதுடன், அவர்களின் கேள்விகளுக்கு விளக்கமளிக்கப்பட்டு இளைஞர்களின் பங்களிப்பும் பெறப்பட்டது.

பாடசாலை மட்டத்திலும் இத்திட்டம் தொடர்பான விளக்கமளிக்கப்பட்டு மாணவர்களுக்கு தெளிவு ஏற்படுத்தப்பட்டதுடன், ஆசிரியர்களுடனான சந்திப்பும் நடைபெற்றது.

கன்னியா கிறிஸ்து அரசர் ஆலய பங்குமக்களுடன் சமாதானம், நல்லிணக்கம், முரண்பாடுகளைத் தவிர்த்தல் சம்பந்தமான கலந்துரையாடல் 2022.03.26ம் திகதி ஆலயத்தில் நடைபெற்றது.

மனித உரிமைகள் அடிப்படையிலான அணுகுமுறையொன்றின் மூலம் எவ்வாறு முரண்பாட்டைத் தவிர்க்கலாமெனும் தலைப்பில் கலந்துரையாடல்கள் இளைஞர்களுக்கும், பாடசாலை மாணவர்களுக்கும் எகெட் கரித்தாஸ் மண்டபத்தில் நடைபெற்றது.















### 5. Religious AMITY Project

#### மறைமாவட்ட மாவட்ட சர்வசமய ஆலோசனைக் கூட்டங்கள்

திருகோணமலை மாவட்ட சர்வமத ஒன்றியத்தின் ஏற்பாட்டின் பேரில் எகெட் கரித்தாஸ் நிறுவனம் சமயத் தலைவர்களுக்கான ஒன்றுகூடல் ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு சமஸ்தானத்தில் இடம்பெறும். அந்த வகையில் 2022 ஆம் ஆண்டிற்கான புதிய நிர்வாகத் தெரிவு நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் ஆரம்பிக்கப்பட்டது. தொடர்ச்சியாக நான்காவது ஆண்டுகள் இஸ்லாமிய சமயத் தலைவருக்கு இப்போது வழங்கப்பட்டது. மட்டத்தில் இடம்பெறுகின்ற சமயங்களுக்கு இடையே ஏற்படும் முரண்பாடுகளை தீர்ப்பதற்கு இக்குழுவானது சிறப்பாக இயங்கி வருகின்றது.





திருகோணமலை கரித்தாஸ் நிறுவனத்தினால் மாவட்டத்தில் அமைந்துள்ள ஊடகவியலாளர்களுக்கான கருத்தரங்கு எகெட் கரித்தாஸ் கேட்போர் கூடத்தில் 2022.07.23 இடம்பெற்றது. ஊடகவியலாளர்களின் பொருட்கள் மற்றும் சமய நல்லிணக்கத்திற்கு எவ்வாறு தாங்கள் பங்களிப்பு செய்ய வேண்டும் என்பது தொடர்பான கருத்தரங்கு இடம்பெற்றது. இந்நிகழ்வின்போது ஊடகவியலாளர் சங்க தலைவரினால் 2022 ஆம் ஆண்டுக்கான ஊடக கோப்பகம் (Telephone Directory) பணிப்பாளருக்கு வழங்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்வின் போது திருகோணமலை மாவட்டத்திற்கான தனியான இணையத்தளம் இல்லாததன் காரணமாக எதிர்வரும் காலத்தில் திருகோணமலை பிரதேசத்திற்கென இணையதளம் ஒன்றை உருவாக்குவதற்கான செயற்திட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதற்கு வளவாளராக கிழக்கு மாகாண முன்னாள் கலாச்சார பணிப்பாளர் முன்னெடுத்தது குறிப்பிடத்தக்கது.





தவறு நேர்ந்து விடுமோ என்று அஞ்சி எந்த செயலையும் செய்யாமல் பின் வாங்குவது இழிவானது.

- **ஞாயிறு பள்ளி ஆசிரியர்களுக்கான மனித மாண்பு பயிற்சிப்பட்டறை**

நிறுவனத்தினால் மூதூர் பிரதேசத்தில் ஞாயிறு பாட ஆசிரியர்களுக்கான பயிலுனர் பயிற்சி மூதூர் ஞானப்பிரகாச மண்டபத்தில் காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை இடம்பெற்றது. இதில் அனைத்து சமய ஞாயிறு பாடசாலை ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். இவர்களுக்கு மாணவர்கள் மத்தியில் காணப்படுகின்ற மனித மாண்பு குறைவடைந்து செல்வது அத்துடன் அவற்றை எவ்வாறு ஆசிரியருக்கான தாங்கள் மாணவர்களை எவ்வாறு வலுப்படுத்த முடியுமெனவும், வளவாளர் திரு.அப்பாஸ் அவர்களால் இத்திட்டத்தினை ஒவ்வொரு ஞாயிறு பாடசாலைகளிலும் நடைமுறைப்படுத்த அவர்களுக்கான காகிதாகிப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

- **ஞாயிறு பாடசாலை மாணவர்களுக்கான மனித மாண்பு தொடர்பான கருத்தரங்கு**

இக்கருத்தரங்கு விளையாட்டு, சித்திரம் மற்றும் உண்மை கதைகள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு மாணவர்களுக்கு மனிதமாண்பு தொடர்பான பயிற்சியளிக்கப்பட்டது. இதில் பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் பங்கு பற்றியதுடன் பாடசாலை அபிவிருத்திச் சமூகமும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்

மாணவர்கள் மத்தியில் காணப்படுகின்ற ஒழுக்க விழுமியங்களையும் மற்றும் சமய நல்லிணக்க விடயங்கள் ஏனைய சமூகத்துடன் எவ்வாறு நாங்கள் வாழ வேண்டும் என்பது பற்றிய அறிவுரைகள் இங்கே வழங்கப்பட்டது

சமாதான செயற்பாடுகளுக்கு மாணவர்களின் பங்களிப்பு எதிர்வரும் சமூக மாற்றத்திற்கு உதவியாக இருக்குமென இரு குழுக்களாக பிரித்து மாணவர்களுக்கு குழு கலந்துரையாடல் இடம்பெற்றது. இந்நிகழ்விற்கு 8 ஞாயிறு பாடசாலைகளை தெரிவுசெய்து பயிற்சி வழங்கப்பட்டது. இதில் இஸ்லாமிய, இந்து மற்றும் கத்தோலிக்க மாணவர்களும் உள்ளடங்குகின்றனர்.




- **மாதாந்த பொதுக்கூட்டம்**

ஒவ்வொரு கிராமங்களிலும் இடம்பெறுகின்ற செயற்திட்டங்களை மீளாய்வு செய்வதற்காக எதிர்வரும் வாரங்களில் நாங்கள் செய்ய இருக்கும் வேலைத்திட்டங்களில் முன்னோட்டமாக மாதாந்த பொதுக்கூட்டங்கள் மூதூர் பிரதேசத்தில் பட்டித்திடல் அம்மன் நகர் இருதயபுரம் சேருவில பிரதேச செயலகத்தில் கிராமத்தில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

மாதாந்த கூட்டத்தினூடாக பாடசாலை மாணவர்களுக்கான உதவி சிறுவர் கழகங்களுக்கிடையிலான செயற்பாடுகள் கண்காணிப்பதுடன் அவற்றை முறையே நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது

கிராமத்தில் காணப்படுகின்ற சமாதான நல்லிணக்க செயற்பாடுகளை ஊக்குவிக்கும் செயற்பாடுகள் பொருளாதார நெருக்கடியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகளை வழங்கப்பட்டுள்ளது.




- **சமகால நெருக்கடியை இளைஞர்கள் எவ்வாறு கையாள்வது**

இளைஞர் கழகத்தினூடாக சமகால நெருக்கடியை எவ்வாறு கிராம மட்டத்தில் முறையாக கையாள்வது தொடர்பான பயிற்சி எகெட் நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது அருட்தந்தை அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட செயலாளர் இளைஞர் சேவை ஒன்றியத்தின் பிரதி பணிப்பாளர் திரு.ரவிக்குமார் மற்றும் திருகோணமலை மாவட்ட இளைஞர் சேவை உத்தியோகத்தர் திரு.அலாவுதீன், திருகோணமலை கச்சேரியில் அனர்த்த முகாமைத்துவ உத்தியோகத்தர் திரு.மயூரன் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

- **பொது பண்டிகைகளும் கொண்டாட்டங்களும்**

இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு சமயத்தின் விசேட தினங்கள் கொண்டாடுவது வழக்கம் அந்த வகையில் இந்துக்களின் புது வருட நிகழ்வினை பட்டித்திடல் இளைஞர் கழகத்துடன் இணைந்து கொண்டாடப்பட்டது. பாடசாலை மாணவர்கள் மற்றும் சிறுவர்கள் அங்கத்தவர்களும் இதில் கலந்து கொண்டதுடன் சமாதானக் குழு ஒழுங்கமைப்பு பணிகளை மேற்கொண்டது. இதனூடாக ஏனைய சமயத்தவர்கள் இந்து மதத்தவர்களின் கலாசார நிகழ்வுகள் மற்றும் அவர்களின் பாரம்பரிய விளையாட்டுக்களை அறிந்து கொண்டனர்.

சிங்கள மக்களின் விசேட தினமான பொசன் போயா தினத்தை அனுஷ்டிக்கும் வகையில் சேருவில சமாதான குழு மற்றும் இளைஞர் கழகங்கள் ஒன்றிணைந்து பிரதேச மக்களுக்கு உணவு தானம் வழங்கப்பட்டது. நாட்டின் நல்லிணக்கத்தை வேண்டி வழிபடுவதுடன் எதிர்வரும் காலங்களில் சமய நல்லிணக்க விடயங்கள் பிரதேசத்தில் மேலோங்கி இருக்கவேண்டும் என்பதும் மற்றும் நாட்டின் நிலையான சமாதானத்தை வேண்டி இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

- **அனுபவப்பகிர்வு**

மன்னார் மறைமாவட்ட சமாதானக் குழு 26.01.2022 திருகோணமலை மறை மாவட்டத்திற்கு வருகை தந்து திருகோணமலையில் உள்ள சமய ஸ்தலங்களை தரிசித்தனர். இந்து, கத்தோலிக்கம், இஸ்லாம் ஆகிய சமயத்தவர்கள் இக்குழுவில் அங்கம் வகித்தனர். திருகோணமலையில் அமைந்துள்ள இஸ்லாமிய பள்ளிவாயில், கத்தோலிக்க தேவாலயம் மற்றும் திருக்கோணேஸ்வரர் ஆலயம் போன்றவற்றை தரிசித்து அந்த சமயங்களின் முக்கியத்துவம் மற்றும் அவர்களின் சமய அனுஷ்டானங்கள் தொடர்பாகவும் விளக்கமளிக்கப்பட்டது. இதனூடாக மக்கள் மத்தியில் உள்ள தவறான எண்ணக்கருக்கள் நீங்கி தெளிவு பெற்றதுடன் திருகோணமலை மாவட்ட உறவுகளுடன் நல்லுறவு ஏற்பட்டது.




- **காலநிலை சவால்களை தவிர்க்க அரச திணைக்களங்களில் வீட்டுத்தோட்டம் செய்கையை ஊக்குவித்தல்**

பருவநிலை மாற்றம் காரணமாக மரநடுகை மற்றும் வீட்டுத் தோட்டம் பயிற்சியை திருகோணமலை நிறுவனம் ஊக்குவித்து வருகின்றது. அந்த வகையில் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் காரியாலயத்திற்கு 11.07.2022 அன்று இச்செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இதனூடாக மாவட்ட அரசாங்க அதிபர் காரியாலயத்தில் அரச உத்தியோகத்தர்கள் பங்களிப்புடன் பசளை தயாரிப்பு மற்றும் பயிர்களை வளர்த்தல் போன்றவற்றுக்கான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டது. அத்துடன் திருகோணமலை மேலதிக அரசாங்க அதிபர் அவர்களிடம் மரக்கன்றுகளும் விதைகள் மற்றும் பசளை என்பனவும் வழங்கி வைக்கப்பட்டது.




## 6. வாழ்வாதார உதவித்திட்டம் (Livelihood Project)

Misereor நிதியுதவியுடன் இரு வருடங்களுக்குரிய இத்திட்டத்தில் திருகோணமலை மாவட்டத்திலுள்ள 75 (கத்தோலிக்கர் 35 பேர்) வறிய குடும்பங்களைச் சேர்ந்த பயனாளிகளுக்கு கோழி வளர்ப்பு, ஆடு வளர்ப்பு, மாடு வளர்ப்பு, சிறுகடை வியாபாரம், தையல் இயந்திரம், மீன்பிடி வள்ளங்கள் மற்றும் உபகரணங்கள் என்பன வாழ்வாதார உதவியாக வழங்கப்பட்டதுடன், அவர்களுக்குரிய வலுவூட்டல் கருத்தமர்வுகளும், மேற்பார்வைகளும் இடம்பெற்றன.








## 7. AGIAMONDO Peace Project

### ஞாயிறு பாடசாலை ஆசிரியர்களுக்கான கருத்தமர்வு

AGIAMONDO செயற்றிட்டத்தின் கீழ் திருகோணமலை மாவட்டத்திலுள்ள அனைந்து சமயங்களினதும் ஞாயிறு பாடசாலை ஆசிரியர்களை உள்ளடக்கி அவர்களுக்கு சமாதானமும் நல்லிணக்கமும் தொடர்பான கருத்தமர்வு அருட்பணி V.அலன் IVDei அவர்களினால் நடாத்தப்பட்டது. இதன் போது சமாதானம் தொடர்பான குழுச்செயற்பாடுகள் மற்றும் கலந்துரையாடல்களும் இடம்பெற்றன.






### வீதி நாடகப் போட்டி

இத்திட்டத்தின் கீழ் **'தற்கால பொருளாதார நெருக்கடியில் மனித விழுமியம்'** எனும் கருப்பொருளில் திருகோணமலையிலுள்ள பங்குகளுக்கிடையிலான வீதி நாடகப் போட்டியானது எகெட் கரித்தாஸ் நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இப்போட்டியில் கன்னியா, கும்புறுபிட்டி, நிலாவெளி, செல்வநாயகபுரம், சாம்பல்தீவு, இருதயபுரம் மற்றும் ஆண்டாங்குளம் ஆகிய ஏழு பங்குகளிலிருந்து ஞாயிறு மறை பாடசாலை மாணவர்களும், மறையாசிரியர்களும் பங்குபற்றியிருந்தனர்.

இவ் வீதி நாடகப் போட்டியில் **புனித அன்னை வேளாங்கண்ணி ஆலயம் – ஆண்டாங்குளம்** முதலாம் இடத்தையும், **கிறிஸ்து அரசர் ஆலயம் – கன்னியா** இரண்டாம் இடத்தையும், **திரு இருதய ஆண்டவர் ஆலயம் – இருதயபுரம்** மூன்றாம் இடத்தையும் பெற்றிருந்தனர்.

பங்குபற்றியவர்களுக்கான சான்றிதழ்களும், முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களுக்காக பணப்பரிசில்களும் எம்மால் வழங்கி வைக்கப்பட்டது. பங்குபற்றிய அனைவருக்கும் எமது பாராட்டுக்களும், வாழ்த்துக்களும், நன்றிகளும் உரித்தாகுக.







### 8. வறுமைக்கான காரணங்களைக் கவனத்திற் கொள்ளலும் விவசாயிகளுக்கான உணவுப் பாதுகாப்பை உறுதி செய்தலும் திட்டம் (Food Security project)








இயற்கை முறையிலான வீட்டுத்தோட்டத்தை திருகோணமலை மாவட்டத்தில் ஐந்து பிரதேச செயலகப் பிரிவுகளிலுள்ள (பட்டிணமும் சூழலும், குச்சவெளி, தம்பலககம், கிண்ணியா மற்றும் மூதூர்) கிராமமக்கள் மத்தியில் அறிமுகம் செய்து அவர்களிடையே நஞ்சற்ற உற்பத்திகளை செய்வதன் மூலம் எதிர்காலத்தில் ஆரோக்கியமான சமூதாயத்தை உருவாக்கும் நோக்குடன் கிராமங்களில் சமூகமட்ட குழுக்களை, பாடசாலை மாணவர்கள், முன்பள்ளி மாணவர்கள் மத்தியில் குழுக்களை உருவாக்கி அவர்களுக்குரிய விளிப்பூட்டல் கருத்தமர்வுகள் வழங்கப்பட்டு, அவர்களுக்குரிய பயிர்விதைகள், வீட்டுத்தோட்டம் செய்வதற்குத் தேவையான அனைத்து உபகரணங்களும் வழங்கப்பட்டு வருகின்றதுடன், தற்பொழுது ஐந்து கிராமங்களில் புதிதாக Village Knowledge Centre (VKC) ஆரம்பிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

அத்துடன் தற்போதைய நாட்டின் சூழ்நிலையைக் கருத்திற் கொண்டு இத்திட்டத்தினூடாக கடந்த 2018 – 2022ம் ஆண்டுகளில் பயனடைந்த அவர்களது இயற்கை முறையிலான தோட்டத்தைச் சிறப்பாக செய்து வரும் பயனாளிகளைத் தெரிவு செய்து அவர்களை மேலும் ஊக்குவிப்பதற்காக வீட்டுத்தோட்டம் செய்வதற்குத் தேவையான உபகரணங்கள் எம்மால் வழங்கி வைக்கப்பட்டது.

வெற்றி என்பது உன் நிழல் போல, நீ அதைத் தேடிப்போக வேண்டியதில்லை, நீ வெளிச்சத்தை நோக்கி நடக்கும் போது அது உன்னுடன் வரும்!

**தீரனியம் பிள்ளைநேய பாடசாலை சென்ற இதழ் தொடர்ச்சி...**

"தீரனியம்" சிறுவர்நேய பாடசாலை என்ற பெயருடன் 2017ம் ஆண்டு சித்திரை மாதம் 8ம் திகதி மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் அதிமேதகு கலாநிதி யோசப் பொன்னையா அவர்களாலும், எமது சபையின் ஆசிய பிராந்திய முதல்வர் மேதகு அருட் சகோதரர் Rev. Bro. Bekaert Godfried அவர்களாலும் சுகாதார அமைச்சின் சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஜெயவர்தன பண்டார அவர்களினாலும் ஏனைய விசேட அதிதிகளினாலும் திறந்துவைக்கப்பட்டது. ஏழு தீரனியர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட "தீரனியம்" இன்று 60க்கும் மேற்பட்ட தீரனியர்கள் திறன் அபிவிருத்தி பயிற்சி பெறுகின்றனர். ஒருசிலர் முன்பள்ளி பாடசாலைகளிலும், முறைசார் பாடசாலைகளிலும் முதலாம் தரத்தில் அனுமதிக்கப்பட்டு கல்வி கற்பதோடு பிற்பகலில் தீரனியத்தில் பேச்சுத்திறன், மொழியாற்றல் பயிற்சி பெற்று வருகின்றனர். தீரனியம் பாடசாலையில் செயலாற்றும் திறன் அபிவிருத்தி வளவாளர்கள் விசேட பயிற்சி பெற்று. அர்ப்பணிப்புடன் செயலாற்றி வருகின்றனர். இவர்களுக்கு வாரந்தோறும் தொடர்பயிற்சி செயலமர்வாக திறன் அபிவிருத்தியில் புதிய புதிய அணுகுமுறைகள் கொடுக்கப்படுகின்றன.

***தீரனியத்தின் :***

**தூர நோக்கானது** நடத்தைசார் சமூக இசைவாக்கத்தை உருவாக்கல் என்பதாகும்.

**பணி நோக்கானது** பரிவிரக்க அன்பினூடாக கல்வி, மருத்துவ இடையீடுகளின் மூலம் சமூக பொருத்தப்பாட்டுடன் மாண்போடு வாழ உடல், உள அறிவு, உணர்வுசார் திறன் அபிவிருத்தியை வழங்குவதாகும்.

இதன் அடிப்படையிலேயே தீரனியர்களுக்கு, பேச்சு சிகிச்சையாளர், இயன் மருத்துவம், தசைநார் திறன் அபிவிருத்தி பயிற்சிகள், சமூக இசைவாக்கம், தானே தனது கடமைகளை நாளாந்தம் செய்யும் திறன் பயிற்சிகள் போன்றவை கொடுக்கப்படுவதோடு உளநல மருத்துவம், குழந்தை நல மருத்தவம் போன்ற மருத்துவ பரிசோதனைகளும் நடைபெறுகின்றன. அத்தோடு பெற்றார் சந்திப்பானது உளநல மருத்தவர் டாக்டர் யூடி றமேஸ் ஜெயக்குமார், திருமதி தர்சினி ஜெயக்குமார் அவர்களினாலும் ஆலோசனை வழிகாட்டல், புதிய திறன் செயற்பாடுகளை வழங்குதல், யோகாசனப்பயிற்சி போன்றவைகளும் வழங்கப்படுகின்றன. ஓட்டிசம் தினம், பொங்கல் விழா, ஒளி விழா, ஆசிரியர் தினம், கலாச்சார விழா போன்ற நிகழ்வுகளும் நடைபெறுகின்றன. இவற்றோடு மட்டக்களப்பு மாவட்ட அனைத்து செயலகங்கள் ஊடாக நடாத்தப்படும் முன்பள்ளி ஆசிரியர்கள், பாடசாலையில் தரம் ஒன்று கற்பிக்கும் ஆசிரியர்கள், அரச அரச சார்பற்ற நிறுவனங்களில் பணியாற்றும் வளவாளர்கள், மாவட்டத்திற்கு வெளியே மன்னார், யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, திருகோணமலை, கல்முனை போன்ற மாவட்டங்களில் பணியாற்றுபவர்களும் "ஓட்டிசம்" பற்றிய விழிப்புணர் வதிவிட கருத்தரங்குகளாக கொடுக்கப்பட்டன.

அகவை ஐந்தில் காலடிஎடுத்துவைக்கும் தீரனியமானது தீரனியர் மனித மாண்புடன். சமூக அந்தஸ்துடன் வாழவேண்டும், வளர வேண்டும் என்ற முனைப்புடன் எமது சபையின் **God is Love** என்ற அருள் மகுட வாக்கியத்திற்கமைய எமது சபையின் தலைமை மேலாளர் Rev. Bro Dr. Rene Stockman F.C, இலங்கை முதல்வர் அருட் சகோ. ஆ. கிறீஸ்துராஜன் F.C தீரனிய பாடசாலையின் அதிபர் வி. மரியதாஸ் F.C ஆகியோரின் நெறிப்படுத்துல் மேற்பார்வை செய்தல் போன்ற அர்ப்பணிப்பான சேவையினூடாக காலத்திற்கேற்றவகையில் திறன் அபிவிருத்தியை கொடுப்பது விசேட அம்சமாகும்.

மேலும் Brothers of Charity ஆனது இலங்கையில் ஜாயல, நீர் கொழும்பு ஆகிய இடங்களிலுள்ள மாற்றுத்திறனாளிகள் பாடசாலைகள், மட்டக்களப்பில் மாற்றுத்திறனாளிகள் விசேட தொழிற்பயிற்சி பாடசாலை, கல்முனையில் உளநல புனர்வாழ்வு பயிற்சி நிலையம் என்பவற்றினூடாக மனித மாண்புடன் உளநல விருத்தியில் அப்போஸ்தலிக்க சேவையினை ஆற்றி வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தீரனியம் இன்னமும் பல அகவைகளை கடக்க வேண்டும். தீரனியர்களின் வாழ்வு சிறக்க, மகிழ்ச்சியான திறன் அபிவிருத்தியினூடாக மேன்மையான வாழ்வை நோக்கிய பயணத்தில் சிறப்பான சேவைகள் தொடரும் என்பதில் ஐயமில்லை.

**அருட்சகோதரர் ஸ்ரீபன் மத்தியு FC**
**சகோதரர் இல்லம்**
**மட்டக்களப்பு**

# பெரிய வெள்ளி காணிக்கைகள்

| இல | பங்குகள் | தொகை |
|---|---|---|
| 01 | புனித மரியாள் பேராலயம் – திருகோணமலை | 69,000.00 |
| 02 | புனித லூர்து அன்னை திருத்தலம் – பாலையூற்று | 39,205.00 |
| 03 | புனித சூசையப்பர் ஆலயம் – நிலாவெளி | 38,670.00 |
| 04 | இறை இரக்கத்திருத்தலம் – அலஸ்தோட்டம் | 33,105.00 |
| 05 | புனித அந்தோனியார் ஆலயம் – மூதூர் | 31,000.00 |
| 06 | புனித சதாசகாய அன்னை ஆலயம் – அன்புவழிபுரம் | 26,121.00 |
| 07 | புனித குவாடலூப்பே அன்னை ஆலயம் – திருகோணமலை | 25,600.00 |
| 08 | திரு இருதய ஆண்டவர் ஆலயம் – இருதயபுரம் | 25,000.00 |
| 09 | குழந்தை இயேசு ஆலயம் – உவர்மலை | 22,690.00 |
| 10 | புனித பாத்திமா அன்னை ஆலயம் – தம்பலகமம் | 19,025.00 |
| 11 | புனித யூதாததேயு ஆலயம் – இலிங்கநகர் | 12,500.00 |
| 12 | புனித திருமுழுக்கு யோவான் ஆலயம் – சாம்பல்தீவு | 12,000.00 |
| 13 | புனித வனத்து அந்தோனியார் ஆலயம் – செல்வநாயகபுரம் | 8,400.00 |
| 14 | புனித சதாசகாய அன்னை ஆலயம் – கந்தளாய் | 6,650.00 |
| 15 | கிறிஸ்து அரசர் ஆலயம் – கன்னியா | 5,670.00 |
| 16 | புனித செபமாலை மாதா ஆலயம் – குச்சவெளி | 4,200.00 |
| 17 | புனித வேளாங்கண்ணி ஆலயம் – ஆண்டாங்குளம் | - |
| 18 | புனித அந்தோனியார் ஆலயம் – சீனக்குடா | - |
| | மொத்தம் | **378,836.00** |

# திருத்தந்தை தின காணிக்கைகள்

| இல | பங்குகள் | தொகை |
|---|---|---|
| 01 | புனித மரியாள் பேராலயம் – திருகோணமலை | 32,735.00 |
| 02 | திரு இருதய ஆண்டவர் ஆலயம் – இருதயபுரம் | 26,000.00 |
| 03 | இறை இரக்கத்திருத்தலம் – அலஸ்தோட்டம் | 21,826.00 |
| 04 | புனித குவாடலூப்பே அன்னை ஆலயம் – திருகோணமலை | 17,200.00 |
| 05 | புனித சதாசகாய அன்னை ஆலயம் – அன்புவழிபுரம் | 14,766.00 |
| 06 | புனித லூர்து அன்னை திருத்தலம் – பாலையூற்று | 14,060.00 |
| 07 | புனித சூசையப்பர் ஆலயம் – நிலாவெளி | 12,263.00 |
| 08 | குழந்தை இயேசு ஆலயம் – உவர்மலை | 10,360.00 |
| 09 | புனித அந்தோனியார் ஆலயம் – மூதூர் | 6,150.00 |
| 10 | புனித திருமுழுக்கு யோவான் ஆலயம் – சாம்பல்தீவு | 4,500.00 |
| 11 | புனித வனத்து அந்தோனியார் ஆலயம் – செல்வநாயகபுரம் | 4,100.00 |
| 12 | கிறிஸ்து அரசர் ஆலயம் – கன்னியா | 3,500.00 |
| 13 | புனித அந்தோனியார் ஆலயம் – சீனக்குடா | 2,000.00 |
| 14 | புனித வேளாங்கண்ணி ஆலயம் – ஆண்டாங்குளம் | 1,430.00 |
| 15 | புனித பாத்திமா அன்னை ஆலயம் – தம்பலகமம் | 1,230.00 |
| 16 | புனித சதாசகாய அன்னை ஆலயம் – கந்தளாய் | 940.00 |
| 17 | புனித யூதாததேயு ஆலயம் – இலிங்கநகர் | - |
| 18 | புனித செபமாலை மாதா ஆலயம் – குச்சவெளி | - |
| | மொத்தம் | **173,060.00** |

## வரலாற்றை ஆக்கியோர் – 05



இந்திய ஏவுகணை நாயகன், தலைசிறந்த ஆசிரியர், அனைவராலும் விரும்பப்டும் எளிய மனிதர், சிறந்த நூலாசிரியர் என்று போற்றப்படும் அப்துல் கலாம் அவர்கள். தமிழ் நாட்டில் உள்ள இராமேஸ்வரம் என்ற இடத்தில் 15 அக்டோபர் 1931 ஜைனுலாப்தீன் மற்றும் ஆஷியம்மா என்ற தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார். கலாம் அவர்கள் இராமேஸ்வரத்திலுள்ள தொடக்கப்பள்ளியில் தனது படிப்பை தொடங்கினார். இவருடைய குடும்பம் ஏழ்மையில் இருந்ததால் பள்ளி நேரம் போக மற்ற நேரம் செய்தித்தாள் விநியோகம் செய்தார். மதிப்பெண் மீது நம்பிக்கை இல்லாத இவர் நடைமுறையில் தான் கற்றவற்றை சிந்தித்து பயன்படுத்தும் புத்தி வாய்ந்தவராக திகழ்ந்தார். பள்ளிப்படிப்பை முடித்த பின்பு செயின்ட் ஜோசப் கல்லூரியில் இயற்பியல் கற்று இளங்கலைப் பட்டமும் பெற்றார். 1955 விண்வெளி ஆய்வுகுறித்த பொறியியல் படிப்பை சென்னையில் தொடங்கினார். கலாம் அவர்கள் 1960களில் வானூர்தி அபிவிருத்தி அமைத்தல் பிரிவில் விஞ்ஞானியாக தன்னுடைய ஆராய்ச்சி வாழ்க்கையைத் தொடங்கினார். 2002ம் ஆண்டு இந்தியாவின் 11வது குடியரசுத்தலைவராக தன்னுடைய பணியை ஏற்றார். இவர் ஓர் சிறந்த விஞ்ஞானியாக மட்டுமன்றி சிறந்த தலைமைப்பண்பு கொண்டவர்

# APJ அப்துல் கலாம்



என்பதை தன்னுடைய பதவிக்காலத்தில் அவர் நிருபித்தார். இளைஞர்களே எதிர்கால இந்தியாவினை மாற்றுவார்கள் என்று கூறி நான் என்னால் முடிந்த உயரத்தினை பார்த்துவிட்டேன். ஆனால் நீங்கள் என்னை விட உயரத்தை பார்ப்பீர்கள் அதற்காக "கனவு காணுங்கள் அந்த கனவை நினைவாக்க பாடுபடுங்கள்" என்று சொல்லி அனைத்து இளைஞர்களுக்கும் முன்மாதிரியாக திகழ்ந்தார். அனைவராலும் சிறந்த மனதராக போற்றப்பட்ட அப்துல் கலாம் அவர்கள் கல்லூரி ஒன்றில் சிறப்பு விருந்தினராக மாணவர்களிடையே உரையாடிக் கொண்டிருக்கம் போது இறைவனடி சேர்ந்தார்.

---

# இளையோர் பக்கம் அங்கம் 05

## டீன் ஏஜ் பருவம் படபடப்பும் பக்குவமின்மையும் நிறைந்த பருவம்

உங்களுக்கு காதல் கடிதம் வந்ததுண்டா? நீங்கள் யாருக்காவது காதல் கடிதம் எழுதியதுண்டா, கையில் கடிதம் கிடைத்ததும் சொர்க்கத்தின் கதவுகள் தானாகவே திறக்கும் சுகத்தை அனுபவிக்காதவர் வெகு சிலராகத்தான் இருக்க முடியும். தலைவன் - தலைவி உறவைப்பற்றிப் பாடாத இலக்கியங்களே இல்லை எனலாம். காதல் இல்லாத திரைப்படங்களை விரல் விட்டு எண்ணிவிடலாம். காதல் கதை இல்லாத பிரசுரங்களும்நாவல்களும் விலை போவது இல்லை. காதல் தோல்வியால்நிகழும்தற்கொலைகள் இன்றைய நாளிதழ்களை நிரப்பிய வண்ணமாக இருக்கின்றன. காதலுக்காக ஏற்பட்ட போர்களும், கலைப்படைப்புக்களும் நமது வரலாறு சான்றாகின்றது. இருப்பினும் காதல் கடிதங்களை விட பெரியோர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட திருமணங்களே நிலைத்து நிற்கின்றன. அப்படியெனில் நாம் காதலின் விதிகளை மாற்ற வேண்டும்.



### நவீன காதல் விதிகள்

1. ஒரு ஆணும் பெண்ணும் ஒருவரையொருவர் விருப்பினால் போதும் காதலிக்க ஆரம்பிக்கலாம்
2. காதலனுக்கு காதலியும், காதலிக்கு காதலனும் மட்டுமே இருந்தால் போதும் வேறுயாருடைய ஆதரவும் தேவையில்லை
3. திருமணம் நடைபெறுவதற்கு முன் கண்டிப்பாக காதலித்தே ஆக வேண்டும்.
4. முதலில் காதலில் குதிப்போம், படிப்பு, வேலை, குடும்பம் இவை பின்னர் கவனிக்கப்பட வேண்டியவை.
5. காதலில் ஈடுபட 18 - 20 வயது வரைக்கும் காத்திருக்கத் தேவையில்லை.
6. உண்மையான காதல் என்பது மூவரைக் காதலித்து ஒருவரோடு நெருங்கிப் பழகி ஒருவரை மட்டும் திருமணம் செய்து கொள்ளவதில் அடங்கியுள்ளது.
7. காதலிப்பவரை மட்டும் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்ற கட்டாயம் இல்லை
8. இன்றைய நவீன உலகில் காதலிக்காவிட்டால் அது மடமைத்தனம்

### உண்மையான காதல் விதிகள்

காதல் என்பது ஒரு கட்டிடம் இக்கட்டிடம் உறுதியாக நிலைத்து நிற்க வேண்டுமானால் அதற்கு நான்கு தூண்கள் கண்டிப்பாகத் தேவை. இந்த நான்கு தூண்களுள் ஏதாவது ஒன்று இல்லாமற்போனாலோ அல்லது ஏதாவது ஒன்று குறைபட்டாலோ அக்கட்டிடம் இடிந்து விடும்.

### தூண் 01 உடல் வள்ர்ச்சி

உடல் வளர்ச்சி இல்லாமல் காதலில் இறங்குவது களிமண் இல்லாமல் மட்பாண்டம் செய்ய முற்படுவதைப் போன்றது அதனால் தான் ஒவ்வொரு நாடும் திருமணத்திற்கென்று ஒரு குறிப்பிட்ட வயது வரம்பை கொடுக்கின்றது.

### தூண் 02 மன / உள வளர்ச்சி

கவர்ச்சியையும், நட்பையும் காதலையும் பிரித்து அறியப் போதுமான மனவளர்ச்சி வேண்டும். மின்னுவதெல்லாம் பொன்னாகத் தெரியும் இளைய பருவத்தினர். நிழலிருந்து நிஜத்தைப் பிரித்தறிக் கூடிய மனப்பக்குவம் வந்தவுடன்தான் காதலிக்கத் துணிய வேண்டும். தகுந்த மனவளர்ச்சி இல்லாமல் போனால் உண்மைக் காதலுக்குத் தேவையான குணங்களான சுதந்திரம், பொறுப்புணர்வு. ஆழ்ந்த அன்பு, சமுதாய ஒழுங்கு ஆகியவை இழந்து காதல் தோல்விக்கு பலியாகும் வாய்ப்பு ஏற்படலாம்.

### தூண் 03 பொருளாதார உறுதிப்பாடு

பொருளாதார உறுதிப்பாடு இல்லாமல் காதலில் இறங்குவது அடித்தளமே இடாது வீடு கட்ட முற்படுவதைப் போன்றது. பொதுவாக காதலின் முடிவு திருமணமாக இருக்க வேண்டும் என்ற விருப்பம் எல்லோருக்கும் இருக்கும்போது திருமணத்திற்கும் அதன் பின்னர் தோன்றும் குடும்பத்திற்கும் ஈடுகொடுக்கும் வகையில் உன்னுடைய பொருளாதார வளர்ச்சி இல்லாவிட்டால் உன் காதல் தோல்வியை அடையும்.

### தூண் 04 கடவுள் நம்பிக்கை



நம் மனித வாழ்க்கை நம்பிக்கையின் அடிப்படையில் தான் இயங்குகின்றது. காதலர்கள் ஒருவர் ஒருவர் மேல் கொண்டிருக்கும் நம்பிக்கைக்கு கடவுள் நம்பிக்கை அடிப்படையாக அமைய வேண்டும். ஏனெனில் காதல் என்பது வசந்த காலத்தில் ஆரம்பித்து தேனிலவில் முதிர்ச்சி பெற்று சொர்க்கத்தில் முடிவடைவது என்பதெல்லாம் வெறும் கற்பனையும், ஆசையும் தான்பல இன்னல்கள் துன்பங்கள் தோன்றினாலும் உண்மைக் காதலைக் கட்டிக் காக்க வேண்டிய நேரங்களில் கடவுள் நம்பிக்கை மட்டும் துணைவரும் என்பதில் ஐயமில்லை.

எனவேதான் இப் பருவத்தை படபடப்பும் பக்குவமின்மையும் நிறைந்த பருவம் என உளவியலாளர் குறிப்பிடுகின்றனர். தான் நினைத்ததைச் சாதிக்க வேண்டும் என்ற துடிதுடிப்பு உயர்வான இலட்சியங்களை பற்றிய கனவு அங்கீகரிக்கவும் பாராட்டவும் தேவையான நண்பர்கள் சட்டென முகத்தைத் தூக்கி வைத்துக்கொள்ளும் கோபம், நண்பர்கள் தவறாகப் புரிந்து கொண்டால் தனிமையில் அழுவது என இவர்களின் பருவ நடவடிக்கைகள் அடுக்கிக் கொண்டே போகலாம். இவர்களில் சாந்த சொருபிகளும் உண்டு. அயராது உழைப்பவர்களும் உண்டு யாராவது நேர்மை தவறினால் அவர்கள் மேலிருக்கும் மரியாதையை உடனே விலக்கிக் கொள்வார்கள். பிரமிப்பூட்டும் தலைவனோ, தங்கள் திறமையை மெச்சுகின்ற தலைவியோ கிடைத்து விட்டால் அவர்கள் பெருமைப்படும்படி சாதித்துக்காட்டுவார்கள்.

- அருட்சகோதரர் R. ஜோசப் ஜெயகாந்தன்

இளையோருக்கான தேடல் தொடரும்....

# புனித லூக்க நற்செய்தி 09 – 12 அதிகாரங்கள்

- எல்லோரும் பங்குபற்றலாம்
- போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது
- அதிர்ஸ்டசாலி குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர்.
- பரிசுகள் முறையே 1ம் பரிசு 500/=, 2ம் பரிசு 300/=, 3ம் பரிசு 200/=

**கேள்வி பதில்**

1. திருத்தூதர்கள் ஊர் ஊராகச் சென்று என்ன செய்தார்கள்?

விடை :......................................................................................................

2. இயேசு தாம் போகவிருந்த எல்லா ஊர்களுக்கும், இடங்களுக்கும் தமக்கு முன்னே இருவர் இருவராக யாரை அனுப்பினார்?

விடை :......................................................................................................

3. சாலமோனின் ஞானத்தைக் கேட்ட உலகின் கடைகோடியிலிரந்து வந்தவர் யார்?

விடை :......................................................................................................

4. உங்கள் செல்வம் எங்கு உள்ளதோ, அங்கே என்ன இருக்கும்?

விடை :......................................................................................................

5. இயேசு தம் சீடரிடம் எதைக் குறித்து எச்சரிக்கையாய் இருங்கள் என்று கூறுகிறார்?

விடை :......................................................................................................

**சரி, பிழை எழுதுக.**

6. மேற்கிலிருந்து காற்று அடிக்கும் பொழுது மிகுந்த வெப்பம் உண்டாகும். ( )

7. ஏறக்குறைய ஐயாயிரம் ஆண்கள் இருந்தனர். ( )

8. கப்பர்நாகுமே நீ வானளாவ உயர்த்தப்படுவாயோ? இல்லை பாதாளம் வரை தாழ்த்தப்படுவாய் ( )

9. விண்ணகத் தந்தை தம்மிடம் கேட்போருக்குத் தூய ஆவியைக் கொடுப்பது எத்துணை உறுதி ( )

10. பேதுரு இயேசுவைக் காண வாய்ப்புத் தேடிக்கொண்டிருந்தான் ( )

**கோடிட்ட இடங்களை நிரப்புக.**

11. என்னைப் ________________ என்னை ________________ புறக்கணிக்கிறார்.

12. விளக்குச் சுடர் முன் நீங்கள் ________________ இருப்பது போல் அனைத்தும் ________________ இருக்கும்.

13. நீங்களும் ________________ இருங்கள். ஏனெனில் நீங்கள் ________________ நேரத்தில் ________________ வருவார்.

14. இயேசு யோவானை நோக்கி ________________ ஏனெனில் நமக்கு எதிராக இராதவர் ________________ இருக்கிறார் என்றார்.

15. ஏனெனில் அறிவுக் களஞ்சியத்தின் ________________ நீங்கள் எடுத்துக்கொண்டீர்கள்.

பெயர் :......................................................................................................

முகவரி :......................................................................................................

பங்கு :......................................................................................................

முடிவுத்திகதி 07.10.2022

# ஹாய் குட்டீஸ்
## திருவிவிலிய புதிர் போட்டி – 51
## திருப்பாடல் 121 – 150 அதிகாரங்கள்

1. ஆண்டவர் தம்மிடம் பற்றுக்கொள்ளும் அனைவரையும் என்ன செய்கின்றார்?

விடை :......................................................................................................

2. ஆண்டவர் தமக்கென்று யாரை தேர்ந்துகொண்டார்?

விடை :......................................................................................................

3. வன்செயல் செய்வாரை எது விரட்டி வேட்டை ஆடுவது?

விடை :......................................................................................................

4. கனிதரும் மரங்கள் அனைத்தும் என்ன மரங்கள்?

விடை :......................................................................................................

5. செம்மையாக ஒன்றிணைக்கப்பட்ட நகர் எது?

விடை :......................................................................................................

6. பொல்லார் கட்டிய கயிறுகளை ஆண்டவர் என்ன செய்தார்?

விடை :......................................................................................................

7. ஆண்டவர் யாரைத் தேர்ந்தெடுத்தார்?

விடை :......................................................................................................

8. ஆண்டவர் மீது நம்பிக்கை வைத்துள்ளோர் எந்த மலைபோல் என்றும் அசையாது இருப்பர்?

விடை :......................................................................................................

9. இஸ்ரயேலைக் காக்கின்றவர் என்ன செய்வது இல்லை?

விடை :......................................................................................................

10. ஆட்சித் தலைவர்களை என்ன செய்யக் கூடாது?

விடை :......................................................................................................

11. ஆண்டவர் நலிந்தோரை என்ன செய்கின்றார்?

விடை :......................................................................................................

12. கண்ணீரோடு விதைப்பவர்கள் எப்படி அறுவடை செய்வார்கள்?

விடை :......................................................................................................

13. பகலை ஆள்வதற்கெனக் கதிரவனை உருவாக்கியவருக்கு என்ன செலுத்த வேண்டும்?

விடை :......................................................................................................

14. ஆண்டவர் என்ன உடையவர்?

விடை :......................................................................................................

15. விண்மீன்களின் இலக்கத்தை எண்ணி, ஒவ்வொன்றையும் எப்படி அழைக்கின்றார்?

விடை :......................................................................................................

பெயர் :......................................................................................................

முகவரி :......................................................................................................

தரம் :......................................................................................................

பங்கு :......................................................................................................

முடிவுத்திகதி 07.10.2022

# சிறுவர்களுக்கான போட்டி

## படத்திலுள்ள 06 வித்தியாசங்களைக் கண்டுபிடித்தலும் நிறம் தீட்டலும்





- ✶ பாலர் முதல் தரம் 05 வரையுள்ள மறைக்கல்வி மாணவர்களுக்கு.
- ✶ திருமலைத்தீபத்தில் தரப்படும் படம் 01ற்கு மாத்திரம் நிறந்தீட்டி படம் 02 வித்தியாசங்களைக் கண்டுபிடித்து படத்திலேயே குறிக்க வேண்டும்
- ✶ போட்டோ பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது
- ✶ 1, 2, 3ம் இடங்களைப் பெறுபவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்

**1ம் பரிசு – 500/-     2ம் பரிசு – 300/-     3ம் பரிசு– 200/-**

பெயர் :..........................................................................

முகவரி :..........................................................................

தரம் :..........................................................................

பங்கு :..........................................................................

முடிவுத்திகதி 07.10.2022

## விடுபட்ட எழுத்துப் புதிர் போட்டி முடிவுகள் – 40

### லூக்கா நற்செய்தி ( 1 – 2 ) வரை

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நே | ர் | மை | யா | ள | ர் | க | ள் | வா | |
| | ச | வ | ம் | கே | ல | த | பெ | ன | யா |
| | சீ | ழி | து | க | லி | லே | யா | தூ | ரி |
| | து | ம | த் | | யா | தே | யூ | த | ம |
| ன் | ஸ் | ர | ரே | யோ | சே | ப் | பு | ர் | ள் |
| க | கு | பி | ச | | னை | ய | ரி | அ | க |
| ம | அ | ன | நா | சி | ச் | ழ் | கி | ம | ர் |
| லை | | ர் | ம் | டு | ட் | ழ | க | ரி | ய |
| த | த | த் | டு | ப | ப் | மை | ம் | செ | டை |
| தீ | வ | ன | த் | தொ | ட் | டி | | | இ |

### பரிசுக்குரியவர்கள்

1ம் பரிசு 500/= ரூபா
A. துர்ஷி
இல. 25/13, வேளாங்கண்ணி வீதி
பள்ளத்தோட்டம்



2ம் பரிசு 300/= ரூபா
ஜோ. அருஷன்
இல. 10, காந்தி நகர்
அன்பவழிபுரம்



3ம் பரிசு 200/= ரூபா
பி. டொறின் நிலாஷி
இல. 67, பிரதான வீதி
புளியங்குளம்

## சிறுவர்களுக்கான நிறம் தீட்டுதல் போட்டி முடிவுகள்

பங்குபற்றியவர்கள் – 19 சிறார்கள்

### பரிசுக்குரியவர்கள்



1ம் பரிசு 500/= ரூபா
மி.சா யுவான்சிகா
60/4, பிரதான வீதி
புளியங்குளம்
அலஸ்தோட்டம்

2ம் பரிசு 300/= ரூபா
யோசப் யேசுதாசன் டிவேஞ்சன்
இல. 676, அன்புவழிபரம்
திருகோணமலை

3ம் பரிசு 200/= ரூபா
**S.K** செரிக் மாசல்
இல. 35, ஹெம்பேக்கர் வீதி
பாலையூற்று



## ஹாய் குட்டீஸ்
## திருவிவிலிய புதிர்போட்டி – 48
## திருப்பாடல் 31 – 60 அதிகாரம்

பங்குபற்றியவர்கள் : 09 பேர்

மிகச் சரியாக விடையளித்தோர்: 02 குட்டீஸ்

500/= ரூபா
ஜே. ஜெரோம்
இல. 727, அன்புவழிபுரம்
திருகோணமலை

500/= ரூபா
யு. மனாசே பிரியதர்ஷன்
இல. 57, தபால்நிலைய வீதி
திருகோணமலை

## சொற்களை வைத்து இறைவார்த்தையைக் கண்டுபிடித்தல் போட்டி முடிவுகள்

பங்குபற்றியவர்கள் – 18 பேர்

மிகச் சரியாக விடையளித்தோர்: 06 பேர்

### பரிசுக்குரியவர்கள்



1ம் பரிசு 500/= ரூபா
திருமதி **M.S**. தனராஜா
இல. 427, அன்பவழிபுரம்
திருகோணமலை

2ம் பரிசு 300/= ரூபா
தியோப்பிலஸ் ருக்ஷிக்கா கார்மலீன்
இல. 170/7, அலஸ்தோட்டம்
திருகோணமலை

3ம் பரிசு 200/= ரூபா
பா. ஜெயசாந்தினி
1ம் வட்டாரம், சல்லி
சாம்பல்தீவு

**பங்குபற்றிய அனைவருக்கும் வாழ்த்துக்களும் நன்றிகளும்**

எல்லாத் துன்பங்களுக்கும் இரண்டு மருந்துகள் உள்ளன. ஒன்று காலம், இன்னொன்று மௌனம்.

# புனித சதாசகாய அன்னை ஆலயத்தின் 31வது வருடாந்த திருவிழா

அன்புவழிபுரம் புனித சதாசகாய அன்னை ஆலயத்தின் 31வது வருடாந்த திருவிழா 2022.07.29 வெள்ளிக்கிழமை பங்குத்தந்தை அருட்பணி. சூ. டக்ளஸ் ஜேம்ஸ் அடிகளாரின் தலைமையிலான கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. நவநாட் கால மறையுரைகளை வெவ்வேறு மாவட்டங்களையும், துறவற சபைகளையும் சேர்ந்த குருக்கள் வழங்கினார்கள். மாதத்தின் முதல் புதன்கிழமையன்று விசேட திருப்பலியும், நோயுற்றோர் வயோதிபருக்கான திரு எண்ணெய் பூசி அர்ச்சிக்கும் திருச்சடங்கும் நிறைவேற்றப்பட்டது. 07.08.2022 ஞாயிறன்று திருவிழாத்திருப்பலியை மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு. நோயல் இம்மானுவேல் ஆண்டகை அவர்கள், மறைமாவட்ட சிறிய குருமட அதிபர், பங்குத்தந்தை, துறவறசபைகளின் பிரதிநிதிகள், திருகோணமலையிலுள்ள பல்வேறு பங்குகளைச் சேர்ந்த இறைமக்களோடு சேர்ந்து ஒப்புக்கொடுத்தார். திருப்பலியின் இறுதியில் மக்களின் மகிழ்ச்சி ஆரவாரத்தின் மத்தியில் ஆயர் அவர்கள் ஆலயத்தின் கொடியினை இறக்கி திருவிழா நிகழ்வுகளை நிறைவிற்குக் கொண்டுவந்தார்.









# வரோதயநகர் புனித மடுமாதா ஆலயத்தின் வருடாந்த திருவிழா

வரோதயநகர் புனித மடுமாதா ஆலயத்தின் வருடாந்த திருவிழா 22.07.2022 வெள்ளிக்கிழமை பங்குத்தந்தை அருட்பணி ஏ. மதுராங்கன் குரூஸ் அடிகளாரின் தலைமையில் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. 24.07.2022 ஞாயிற்றுக்கிழமை திருகோணமலை மறைமாவட்டத்தின் குருமுதல்வர் அருட்பணி வு. கிங்ஸிலி றொபட் அடிகளாரின் தலைமையில் பங்குத்தந்தை மற்றும் இறைமக்களுடன் இணைந்து திருவிழா திருப்பலியானது ஒப்புக்கொடுக்கப்பட்டது.






# பாலையூற்று புனித லூர்து அன்னை திருத்தலத் திருவிழா

லூர்து அன்னையின் திருவிழாவை முன்னிட்டு 20.05.2022 திருச்செபமாலையும் அதனைத் தொடர்ந்து கொடியேற்றப்பட்டு நவநாள் திருப்பலி ஆரம்பமானது. 28.05.2022 அன்று காலை 5.30 மணியளவில் புனித மரியாள் பேராலயத்திலிருந்து திருச்செமாலை பவனி ஆரம்பமானது. இப்பவனியில் மறைமாவட்ட ஆயரும், குருக்களும், அருட்சகோதரிகளும் மரியன்னையின் பக்தர்களும் கலந்து திருச்செபமாலை செபித்துக் கொண்டு லூர்து அன்னையின் கெபியை வந்தடைந்தனர். அதன் பின் அருட்பணி ஜோர்ச் திஸாநாயக்க தலைமையில் திருப்பலி நிறைவேற்றப்பட்டு லூர்து அன்னையின் ஆசீரும் வழங்கப்பட்டது. குறிப்பாக இலங்கை மக்களின் அவலநிலை நீங்கவும் கொடிய கொரோனா நோயின் பிடியிலிருந்து எம்மையும் எம் நாட்டிலுள்ளவர்களையும் பாதுகாக்க வேண்டி பாடல் பாடப்பட்டு திருப்பலி நிறைவடைந்தது. 29.05.2022 அன்று காலை 7.00 மணிக்கு அதி. வண. ஆயர் கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகையின் தலைமையில் மண்ணின் மைந்தன் அருட்பணி பிரட்லி ரொசாயிரோ அடிகளாரும் பங்குத் தந்தையும் இணைந்து திருவிழா திருப்பலியை ஒப்புக்கொடுத்தனர். தொடர்ந்து அன்னையின் திருச்சுரூப பவனியும், ஆசீரும் இடம் பெற்று திருவிழா இனிதே நிறைவேறியது.




